




www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

11 SEPTEMBER 2022 - SUNDAY | Pages - 11 | E Paper - # 006 / Y 01 / 2022

WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk







உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## முஸ்லிம் இளைஞர்களின் விடுதலை:

# ஜனாதிபதி ரணில் தீவிர கரிசனை!

ரவூப் ஹக்கீமுடன் ஜனாதிபதி நேரடிப் பேச்சு!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படாது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்களை விடுவிப்பது குறித்து ஜனாதிபதியின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

முன்னைய வாரம் பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப்

02 »»

# ஆசியாவை வென்றது இலங்கை

ஆசிய வெற்றிக் கிண்ண கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இலங்கை சம்பியனானது.

இலங்கையின் 171 ஓட்ட இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 147 ஓட்டங்களைப் பெற்றது.

இதனடிப்படையில் இலங்கை அணி 23 ஓட்டங்களால்

03 »»

# அரச நிறுவனங்கள் விற்பனைக்கு உண்டு

நஷ்டத்தில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்ளின் (SOEs) மேலாண்மை அல்லது உரிமையை தனியார்மயமாக்கல் செய்ய அரசு முடிவு செய்துள்ளது .

கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் பரிந்துரைகளின்படி 55 அரசாங்க நிறுவனங்களில் குறைந்தது 10 நிறுவனங்களை முதலில் விற்க முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது .

02 »»



# டைட்டானிக் கப்பல் போல் மூழ்கும் எமது தாயகம்

சஜித் பிரேமதாஸ காட்டம்

தற்போதைய ஜனாதிபதி, ஜனாதிபதியானது ராஜபக்சர்களின் ஆசியுடன் என்பது உண்மையே என்றாலும், முன்னாள் ஜனாதிபதியும், முன்னாள் பிரதமரும் வீட்டுக்கு

02 »»

# மகாராணியின் இறுதிச் சடங்கில் ஜனாதிபதி ரணில் பங்கேற்பு!



காலஞ்சென்ற எலிசபெத் மகாராணியின் இறுதிக் கிரியைகளில் இலங்கை சார்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

02 »»

# மீண்டும் பண்டாரநாயக்க யுகம் சந்திரிகாவும், விமுக்தியும் களத்தில்!

பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்மவின் தலைமையிலான நவ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு மற்றும் மாவட்ட தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவிக்கிறார்.

இப்பணிகள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

இதற்கிணங்க கொழும்பு மாவட்ட அமைப்பாளராக ஜீவன் குமாரதுங்க கம்பஹா மாவட்ட அமைப்பாளராக சந்திரிக்கா பண்டாரநாயக

03 »»



# அரச துறைக்கு 2023 இல் ஆட்சேர்ப்பு இல்லை!

அடுத்தாண்டு புதிதாக ஆட்சேர்ப்பதற்கு தடை விதிக்கபப்ட்டுள்ளது.

நாட்டின் நிதி நிலையைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் இந்தீர்மானத்தை எடுத்துள்ளது.

02 »»

# 9-ம் திகதி வன்செயல்களைத் தடுப்பதற்கு இராணுவ பொலிஸ் பிரதானிகள் தவறினர்

விசாரணைக்குழு அறிக்கை

மார்ச் மாதத்தின் இறுதித் தினங்களிலும், மே மாதத்திலும் நாட்டில் இடம்பெற்ற வன்செயல்களின் போது இராணுவம், பொலிஸ் மற்றும் உளவுப் பிரிவுகளில் பாரிய தவறுகள், குறைபாடுகள்

02 »»

# ஐ.நா மனித உரிமையின் கூட்டத் தொடர் திங்கள் ஆரம்பம்!

(ஹிஸாம் ஏ. பாவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51வது அமர்வு நாளை (12) ஆரம்பமாகவுள்ளது.

02 »»

# விமர்சையாக இடம்பெற்ற வை.எம்.எம்.ஏ. பேரவை மாநாடு

சமூக சேவையாளர்களுக்கும் கௌரவம்




(அஷ்ரப் ஏ சமத்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் 72வது வருடாந்த மாநாடு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று 10ஆம் திகதி வை.எம்.எம்.ஏ பேரவையின் தலைவர் சஹிட்.எம்.றிஸ்மி

02 »»


# நாங்கல்லையை சோகத்தில் ஆழ்த்திய மூன்று இளைஞர்களின் மரணம்!

ஜனாஸாக்கள் நல்லடக்கம்!

(ரிஹ்மி ஹக்கீம்)

கேகாலை, ரன்வல பிரதேசத்தில் நேற்று (10) இடம்பெற்ற கோர விபத்தில் 27 வயதான மூன்று இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். மற்றும் இருவர் படுகாயமடைந்த நிலையில் கேகாலை வைத்தியசாலையில்

02 »»






## உயிர்த்த ஞாயிறு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஹக்கிம் வழக்குத் தொடராமல் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து அரசின் அவதானத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

இந்த உரையையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ரவூப் ஹக்கீமை உடன் சந்திக்குமாறு தகவல் அனுப்பியிருந்தர்.

ரவூப் ஹக்கீம் அதேதினம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது, இவ்வாறு வழக்குத் தொடராது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது விபரங்களைக் கேட்டுள்ளார்.

சிறு சிறு குற்றங்க்ளுக்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்டவர்களது விபரங்களை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நிவ்ஸ் பிளஸ்ஸிற்குத் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து சிறுசிறு காரணங்களுக்காக கைது செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் எவ்வித விசாரணைகளுமின்றி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஐ.நா..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி வரை இந்த அமர்வு இடம்பெறவுள்ளதுடன், இலங்கையின் நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் நாளை ஆரம்பமாகி எதிர்வரும் ஒக்டோபர் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை, மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் அண்மையில் இலங்கை தொடர்பான அறிக்கையினை வெளியிட்டது.

இலங்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதுடன் அரசியல் ரீதியில் நெருக்கடியான காலகட்டத்தையும் எதிர்கொண்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம்பெற்ற போராட்டங்களினூடாக ஆட்சி மாற்றம் மற்றும் பொறுப்பு மற்றும் சீர்திருத்தங்களை மக்கள் எதிர்பார்த்துள்ளதாகவும், இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தேசிய பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

கடந்த களங்களில் இலங்கையில் இடம்பெற்ற பொதுப் போராட்டத்தின் போது பொலிஸார் அதிக பலத்தை பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்ததாகவும், இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சீர்திருத்துவது முக்கியம் என உயர்ஸ்தானிகர் பரிந்துரைத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் பெடரிகோ வில்லேகாஸ் மற்றும் ஆணைக்குழுவின் பதில் உயர்ஸ்தானிகர் நடா நஷிப் ஆகியோரையும் சந்தித்தனர்.

இந்த நாட்டில் மனித உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கையில் உள்நாட்டு இயந்திரங்களை பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து அங்கு கலந்துரையாடப்பட்டதாக அலி சப்ரி தனது டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவை அமர்வின் போது இலங்கையின் தற்போதைய நிகழ்வுகள் குறித்து விளக்கமளிப்பதற்காக மகிந்த சமரசிங்க அண்மையில் வாஷிங்டனில் உள்ள தூதரகத்தில் சிவில் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் சொத்து உரிமைகளுக்கான துணைச் செயலாளர் உஸ்ர சேயாவைச் சந்தித்தார்.

நாளை ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், காவிந்த ஜயவர்தன, சமகி ஜன பலவகவின் எரந்த வெலியங்கே ஆகியோர் ஜெனீவாவிற்கு புறப்பட்டுள்ளனர்.

## 9-ம் திகதி..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றிருப்பதாக இது தொடர்பாக நியமிக்கப்பட்டிருந்த முப்படை முன்னாள் தளபதிகள் அடங்கிய குழு தெரிவிக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட அட்மிரல் வசந்த கருணாகொட, விமானப்படை மர்ஷல் ரொசான் குணதிலக, முன்னாள் இராணுவத் தளபதி தயாரத்ன ஆகிய மூவரடங்கிய விசாரணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 31ம் திகதி காலிமுகத்திடல் சம்பவத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் 74 பேரது வீடுகளுக்கு தீ மூட்டி சேதம் ஏற்படுத்துவது தொடர்பாக உளவுப் பிரிவு முன்பே தகவல்களை வழங்கியிருந்த போதும், இவற்றைத் தடுப்பதற்கு பொலிஸாரோ, முப்படையினரோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீடுகளையும், சொத்துக்களையும் தீவைத்துச் சேதப்படுத்துவதைத் தடுப்பதற்கு உயர் இராணுவ அதிகாரிகளோ, உயர் பொலிஸ் அதிகாரிகளோ தம் கீழ் பணிபுரியும் உத்தியோகஸ்தர்களுக்கு கட்டளை வழங்கவில்லை என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த வன்செயல்களின் போது முப்படை, பொலிஸ் மற்றும் உளவுப் பிரிவினரிடையே மூன்று பிரதான குறைபாடுகளை விசாரணைக்குழுவினர் கண்காணித்துள்ளனர்.

பட்டன் பொல்லுகளைப் பயன்படுத்துதல், வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தல் முழங்காலுக்குக் கீழ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்குரிய சந்தர்ப்பம் ஏற்பட்ட போது, பாதுகாப்புப் படையினர் அவற்றைச் செய்யாதிருத்தல், உளவுப் பிரிவினர்களிடையே தொடர்பு இல்லாமை, பாதுகாப்பை நெறிருப்படுத்தும் தொடர்பாடல் இருக்கவில்லை என்பது மூன்றாவது குறைபாடாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தரப்பினரிடையே இந்தக் குறைபாடுகளுக்கு காரணமாக விசாரணைக்குழு சுட்டிக்காட்டியிருப்பது ரதுபஸ்வல, ரம்புக்கனை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற பொலிஸாருக்கும், முப்படை அங்கத்தவர்களுக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை அண்மைக் காலச் சம்பவங்களில் சட்டத்தரணிகளினால் பாதுகாப்புப் பிரிவினர் தொடர்பாக செயற்பட்டுள்ள முறை நாட்டில் சிவில் குழப்பங்கள் ஏற்படும்போது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினர் தயங்குவது என்பதும் காரணங்கள் என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் இன்றும் அரசுக்கு எதிராக அமைதியின்மை ஏற்படுவதனால் ஜனாதிபதி அவர்கள் இது குறித்து துரித கவனம் செலுத்த வேண்டும் என அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அரச நிறுவனங்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம், ஜனதா உர எண்டர்பிரைசஸ் லிமிடெட், லங்கா சலுசல லிமிடெட், அரச வர்த்தக கூட்டுத்தாபன மொத்த விற்பனை நிறுவனம், லங்கா ஃபேப்ரிக் லிமிடெட், நோர்த் சீ லிமிடெட், லங்கா செரமிக் கம்பனி, லங்கா சிமெண்ட் நிறுவனம், சிமெண்ட் கோர்ப்பரேஷன் உட்பட 10 நிறுவனங்கள் இந்த பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது .

2022 இன் முதல் நான்கு மாதங்களில், மொத்த 55 பெரிய நிறுவனங்களில் 52 நிறுவனங்கள் ரூ. 859 கோடி இழப்பய் சந்தித்துள்ளன . 2021ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 13 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக நிதியமைச்சின் நிதியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே துரித நடவடிக்கையை மேற்கொண்டு, சிக்கலில் உள்ள அரசு நிறுவனங்களை மறுசீரமைப்பதற்காக புதிய பிரிவை அரசு அமைத்துள்ளது.

## மகாராணியின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இறுதிக் கிரியை இடம்பெறும் திகதிக்கு முன் ஜனாதிபதி லண்டன் சென்று பிரித்தானியாவின் மன்னர் சார்ள்ஸ் உட்பட அரச குடும்பத்தினரையும், புதிய பிரதமர் லிஸ் டிரஸினையும் சந்திக்கவுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க மூன்று நாட்கள் பிரித்தானியாவில் தங்கியிருப்பார் என ஜனாதிபதி அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரச துறைக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நிதி அமைச்சின் செயலாளர் கே.எம். மகிந்த சிறிவர்தன இது தொடர்பான சுற்று நிருபத்தை வெளியிட்டு சகல அரச நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதேநேரம் அரச அலுவலகங்களுக்கும் புதிய உபகரணங்கள் கொள்வது செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

அரச நிதியிலிருந்து வெளிநாடுகளுக்கு அரச ஊழியர்களை பயிற்சிகளுக்கு அனுப்புவதனைத் தவிர்க்குமாறும் நிதியமைச்சு சகல அரச நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு அறிவித்துள்ளது.

இவ்வாண்டு நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக நிதியமைச்சு அறிவித்துள்ள ஆறு பக்க சுற்று நிருபத்தில் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022-2025 வரை புதிய செயற்திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதும் கடினமாக இருக்கும் என அச்சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதியின்றி நலன்புரி நடவடிக்கைகளின் பிரதி லாபங்களைப் பெறுவோரது எண்ணிக்கையை அதிகரிக்கக்கூடாது என்றும் நிதியமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விமர்சையாக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அமேரிக்க நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜூலி ஜே.ஜங். யும், கௌரவ அதிதியாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸூம் கலந்து சிறப்பித்தனர்

இந் நிகழ்வில் மூன்று சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். எக்ஸ்போ லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹனீப் யூசுப், சுதந்திர தேர்தல் தொண்டர் நிறுவனத்தின் (பப்ரல்) அமைப்பின் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, கொலன்நாவை ஜே.ஜே.சமூக சேவை நிறுவனத்தின் தலைவர் ஹனீப் ஹாஜி ஆகியோருக்கான கௌரவ விருதினை அமேரிக்க தூதுவர் கையளித்தார். அத்துடன் சிறந்த வை.எம்.எம். கிளை நிறுவனங்களுக்கும் அவர்களது திட்டங்களுக்கும் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

## டைட்டானிக்..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அனுப்பப்பட்டது இந்நாட்டின் பொது மக்கள் போராட்டத்தினாலையே என்பதை ஜனாதிபதி மறந்துவிட்டார் எனவும், அதை அவர் நினைவில் வைத்திருந்தால்,அவரால் இவ்வளவு கடுமையாக அடக்குமுறையை அமுல்படுத்த முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மோசமான ஆட்சி மிக்க அரசாங்கத்தை மாற்றுவதற்கு கொள்கை ரீதியாக தலையிட்டதற்காக, கடந்த மே மாதம் 09 ஆம் திகதிக்கு பின்னர் 3500 இக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், 1200 இக்கும் அதிகமானோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தெஹிவளை தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்று (10) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் முழு நாட்டு மக்களையும் மரணப் படுக்கைக்கு இட்டு வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், டைட்டானிக் கப்பலைப் போல நாடு மூழ்கும் போது, அரசாங்கம் அந்த அவல நிலையிலும் கூட, சுய நினைவிழந்தது போல களியாட்ட மகிழும் கேளிக்கை நடனமாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## நாங்கல்லையை..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் மிப்லார் மிஹ்லார், ரஹ்மி ரஹ்மான் மற்றும் மனாஸிர் கான் மல்கான் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

மேலும் விபத்தில் படுகாயமடைந்த அல்தாப் சாதுலி மற்றும் ஸப்ரான் ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த ஐந்து நண்பர்களும் இரவு 11.30 மணியளவில் உணவகம் ஒன்றில் உணவருந்தி விட்டு தமது மோட்டார் சைக்கிள்களுடன் பாதையோரமாக இருந்துள்ளனர். அதனை தொடர்ந்து எதிராக வந்த வேன் ஒன்று இவர்கள் மீது மோதியதனையடுத்தே குறித்த சோகம் நிகழ்ந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த கேகாலை மாவட்டம், நாங்கள்ளை பிரதேசத்தை சேர்ந்த மனாஸிர் கான், ரஹ்மி ரஹ்மான், மிப்ளால் மிஹ்லார் மூவரின் ஜனாஸாக்களை பார்வையிடவும் மற்றும் ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்ளவும் வரலாறு காணாத மக்கள் கூட்டம் வருகை தந்துள்ளனர்.

நாங்கள்ளை பள்ளிவாசலில் மூன்று பேரினதும் ஜனாஸாக்கள் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்ட பின்னர், மூவருக்குமாக ஒரே நேரத்தில் ஜனாஸா தொழுகையும் நடாத்தப்பட்ட தோடு அடுத்தடுத்த கப்றுகள் தோண்டப்பட்டு நல்லடக்கமும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலம் சென்ற மூன்று இளைஞர்கள் தொடர்பில்:

மனாஸிர் கான் (மனாசிக்கான்) -

திருமணம் முடித்து தனது மனைவியுடன் சிறிது காலமே வாழ்ந்தார். தனக்கென்று ஒரு குழந்தையை பெற்றெடுத்து அதனுடன் கொஞ்சி விளையாட ஆசைப்பட்டிருந்தார். அவரது மனைவியோ ஒன்பது மாத கர்ப்பிணித்தாய். அவரது தாய்க்கு ஒரே ஒரு பிள்ளை அவர்தான். தகப்பனும் பல வருடங்களுக்கு முன் மரணித்தார். குடும்பத்தில் தற்பொழுது அவரது தாயும் மனைவியும் மாத்திரமே இருக்கிறார்கள்.

மற்ற வாலிபர் மிப்ளால் -

இவரது தகப்பனுக்கு இரண்டு பிள்ளைகள். ஒன்று பெண் குழந்தை, ஒரே ஆண் மகனாகிய மிப்ளால் தான்

திருமணம் முடித்து மனைவியுடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தார். குழந்தை கிடைக்காமல், குழந்தைக்காக ஆசையோடு கனவுகள் கண்ட நிலைமையில் வாழ்ந்து வந்தார். தற்பொழுது அவரது குடும்ப நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

மற்றையவர் ரஹ்மி ரஹ்மான் -

இவரது குடும்பத்தில் இரண்டு ஆண்கள் மாத்திரம்தான் இரண்டாமவர் இவர் தான். திருமணம் முடித்து முதல் குழந்தை பிறந்து 20 நாட்கள் தான் ஆகின்றது. இவரது குடும்ப நிலைமையும் மிகவும் சோகமான நிலைமையில் உள்ளது.



# கைதிகள் விடயத்தில் நியாயமற்ற செயற்பாடு: உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்!

## அரசாங்கம் மீது கஜேந்திரன் எம்.பி காட்டம்!



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரச்சார செயலாளரும் சட்டத்தரனியுமான காண்டீபனும் நானும் மகசின் சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதிகளை பார்வையிட வந்திருந்தோம் இங்கு உண்ணாவிரதம் இருக்கின்ற கைதிகளில் 3 நபரை சந்தித்ததாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

இந்து உண்ணாவிரத போராட்டத்தில் இருக்கின்ற கைதிகள் சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தமிழர்களாக இருக்கின்றதால் தான் அவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என நாங்கள் கருதுகின்றோம். அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது நீதிமன்றத்திலே முற்படுத்தி அவர்களுக்கு பிணை வழங்கப்பட வேண்டும் என்பதே கோரிக்கையாக இருக்கின்றது.

அவர்கள் உடல் ரீதியாக மிகவும் பலவீனம் அடைந்துள்ளார்கள். இந்த பயங்கரவாத சட்டமானது கொடிய சட்டமாக இருக்கின்றது. இலங்கை அரசாங்கம் இந்த சட்டத்திலே திருத்தங்களைக் கொண்டு வந்துளோம் என சர்வதேச சமூகத்திற்கு கூறிக்கொண்டு இருந்தாலும் கூட எந்தக் குற்றங்களும் செய்யாமல் வெறுமனே இந்த அரச புலனாய்வு பிரிவினருடைய திட்டமிட்ட சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு மிக மோசமான சித்திரவதைக்கு பிற்பாடு விசாரணை இல்லாமல் அவர்கள் அடைத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றால் சட்டத்தின் படி ஆட்சி நிகழுகின்றதா? என்ற கேள்வி இருக்கின்றது.

கடந்த 3,4 வருடங்களுக்குள் கைது செய்யப்பட்டவர்களை அவ்வப்போது சிலரை விடுவிப்பதன் ஊடாக அரசியல் கைதிகளை விடுவிப்பதாக ஒரு பொய்யான தோற்றப்பாடினை இந்த அரசாங்கம் உலகிற்கு காட்டிக்கொண்டிருக்கிறது. இதில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

# பவளவிழா காணும் பள்ளிபோருவ முஸ்லிம் வித்தியாலயம்



மாவனல்லை கல்வி வலயத்திற்குற்பட்ட ஹெம்மாதகம பள்ளிபோருவ மு.வி தனது 75 வருடத்தை பூர்த்தி செய்துள்ளது. 1947.09.16 இல் அன்றைய ஊர் பிரமுகர்களால் ஓலைக் கொட்டிலில் பெண்கள் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல்வேறு சவால்களை வெற்றி கொண்டு எதிர்வரும் 16.09.2022 இல் தனது பவளவிழாவின் ஆரம்ப நிகழ்வுகளை கொண்டாடவுள்ளது.

பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம் நிஸாம் அன்வாரி அவர்களின் தலைமையில் விமர்சையாக கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

அது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த (02) ம் திகதி நடைபெற்றது. கலந்துரையாடலில் மாவனல்லை கல்விப் பணிமனையின் ஆசிரிய மேம்பாட்டு பணிப்பாளர் கௌரவ எம்.எல்.எம் இர்ஷாத் அவர்கள், முன்னால் வலய கல்வி அதிகாரி அல்ஹாஜ் ஸகரிய்யா மற்றும் ஊர் பிரமுகர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் அன்றைய தின நிகழ்சிகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அன்றைய தினம் பாடசாலை மாணாக்கரின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகி 75 ஆவது வருட நினைவுத்தூபியும் திறந்து வைக்கப்படவுள்ளது.

முதல் நாள் நிகழ்வின் பிரதம அதிதியாக சப்ரகமுவ மாகாணக் கல்விப் பணிப்பாளர் கௌரவ குருப்பு ஆரச்சி அவர்கள் கலந்து கொள்வதோடு, விசேட அதிதிகளாக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் கௌரவ அன்ஷாப் தாவுஸ், மற்றும் ஆரம்பப் பிரிவு நிர்மானப் பணிப்பாளர் கௌரவ கோறலகே அவர்களும் மாவனல்லை கல்விப் பணிமனை பணிப்பாளர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

– நியாஸ் ஸாலி


**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அவிபிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடயோர் 075 40 10 238 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

NEWS PLUS


## ஆசியாவை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வெற்றியீட்டியது. இலங்கை ஆறாவது முறையாக ஆசிய கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

டுபாய் விளையாட்டரங்கில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணய சுழற்றியில் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை இலங்கை அணிக்கு வழங்கியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 170 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஒரு கட்டத்தில் 58 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்த போது பானுக ராஜபக்ஷ வும், வனிந்து ஹசரங்கவும் இணைந்து ஓட்டங்களைக் குவித்து அணிக்கு வலு சேர்த்தனர். பானுக ராஜபக்ஷ ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களையும், வனிது ஹசரங்க 36 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஹாரிஸ் ரவூப் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

## மீண்டும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

குமாரதுங்க களுத்துறை மாவட்ட அமைப்பாளராக குமார வெல்கம்வும் நியமிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

இதே வேலை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வர் விமுக்தி குமாரதுங்க தனது அரசியல் பயணத்தை இக்கட்சி மூலம் ஆரம்பிக்க உள்ளதாகவும் அத்தனகல்ல தேர்தல் தொகுதி அமைப்பாளராக அவர் நியமிக்கப்படவுள்ளதாகவும் தனது கட்சி அமைப்பு பணி குறித்து விளக்கம் தெரிவிக்கையில் இவர் தெரிவித்தார்.

# காரைதீவு பிரதேச மாணவர்களுக்கு சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வ

(நூருல் ஹுதா உமர்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் காரைதீவு பிரதேச உயர்தர மாணவர்களுக்கு சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்றாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு காசோலைகளை வழங்கி வைத்தார்.



இந்நிகழ்வில் தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் எம் எம் அச்சிமுகமட், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 SEPTEMBER 11 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# பாகிஸ்தான் மக்களுக்கு உதவுவோம்!

அயல் நாடான பாகிஸ்தானில் தொடர்ந்து பெய்து வரும் பருவ மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக அதன் வரலாறு காணாத அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளது. பாகிஸ்தானின் மூன்றில் ஒரு பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு பாகிஸ்தான் அரசு சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானின் இலங்கை உயர் ஸ்தானிகர் உமர் பாரூக் புர்கி இலங்கை மக்களிடம் உதவிகளை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடரும் மழை காரணமாக 1325 பேருக்கு மேற்பட்டோர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இவர்களில் 350க்கும் மேற்பட்ட குழந்தைகளும் இருக்கின்றனர்.12703 பேர் காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரையில் காணப்பட்ட புள்ளிவிபரங்களின்படி 33 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.36 மில்லியன் ஏக்கர் விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடந்த இரு வார காலமாக நீரில் மூழ்கி காணப்படுகின்றது. பல லட்சம் மக்கள் அகதிகளாக்கப் பட்டுள்ளனர்.

இந்த நிலைமையை தம்மால் கையாள முடியாததன் காரணமாக பாகிஸ்தான் சர்வதேச சமூகத்திடம் உதவிகளை கோரியுள்ளது.

பாகிஸ்தான் மக்களுக்கு தம்மால் முடிந்த உதவிகளை வழங்குமாறு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா இலங்கை முஸ்லிம்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஜம்இய்யத்துல் உலமாவும் ,கொழும்பு, கண்டி மாவட்டங்களின் பள்ளிவாசல்களின் சம்மேளனங்களும் பள்ளிவாசல்களில் நிதி திரட்டும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளது.

இவ்வாரம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்த நிதி திரட்டும் செயற்பாடு அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை ஜ/ம்மா தொழுகை வரை நீடிக்க உள்ளது. உதவியை நிதியாக தருமாறு பாகிஸ்தான் தூதுவராலயம் கேட்டுள்ளது.

பாகிஸ்தான் பல்வேறு நெருக்கடிகளின் போது எவ்வித பயன்களையும் எதிர்பார்க்காது எமது நாட்டுக்கு உதவியுள்ளது. எமது நாட்டுப் பிள்ளைகளின் உயர் கல்வி மேம்பாட்டுக்காக வருடாந்தம் நூற்றுக்கணக்கான புலமைப் பரிசில்களை வழங்கி வருகிறது.

இவ்வாறு எமது நாட்டுக்கு உதவும் பாகிஸ்தான் இன்று வெள்ள அனர்த்த மக்களுக்கு உதவ முன்வருமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

எமது நாடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. உண்மையில் எம்மால் இயன்ற தொகையை வழங்கி பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நேசக் கரம் நீட்டுவோம்.

## அரங்கம்

# கஞ்சா ஏற்றுமதி செய்து டொலர் சம்பாதிக்கத் தயாராகும் இராஜாங்க அமைச்சர் டயானா!



### இராஜாங்க அமைச்சர்களாக 5 சிறுபான்மையினர்!

நீண்ட காலமாக பேசப்பட்டு வந்த ராஜாங்க அமைச்சர்களின் நியமனம்,ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மகாநாடு இவ்வாரத்தில் இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வ கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்காததனையடுத்து பொதுஜன பெரமுன அங்கத்தவர்களை உள்ளடக்கி இராஜாங்க அமைச்சர்கள் 37 பேர் வியாழனன்று நியமிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற பதவியேற்பு வைபவத்தின் போது ராஜாங்க அமைச்சர்கள் தனித்தனியாக சத்தியப்பிரமாணம் எடுக்காது கூட்டாகச் சத்திய பிரமானம் எடுத்தது விசேட அம்சமாகும்.

இதற்கு முன் ராஜாங்க அமைச்சர் பதவி வகித்த பலருடன் புது முகங்கள் பலரும் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். இதற்கு முன் ராஜாங்க அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டிருந்த பெயர்கள் பொதுவான பெயர்களாக மாற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### அமைச்சராக பதவி ஏற்ற 4 சுதந்திரக் கட்சி எம்பிக்களின் எம்.பி பதவி பறிக்கப்படுமா?

புதிதாக நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர்களில் 4 பேர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களாவார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதில்லை என தீர்மானம் எடுத்துள்ள நிலையிலேயே 4 பேரும் அமைச்சுப் பொறுப் பேற்றுள்ளனர். ரஞ்சித் சியம்பலாபிட்டிய, லசன்ந்த அழகியவன்ன ,ஜகத் புஷ்பகுமார ஆகியோருடன் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் திசாநாயக்கவும் அமைச்சர்களாக பதவியேற்றனர். சாமர சம்பத் முதன்முறையாக அமைச்சர் பதவி ஒன்றை ஏற்றுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவருக்கு அங்கத்தவர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு கூடுதலான அங்கீகாரம் வழங்கப்பட்டு ஒரு வாரத்திலேயே 4 சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் பதவிகளை ஏற்றுள்ளனர்.

இதே நேரம் அனுராதபுர மாவட்ட எம்.பி துமிந்த திசாநாயக்கவும் அமைச்சர் பதவி ஒன்றை எதிர்பார்த்திருப்பதாக சுதந்திர கட்சித் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதே நேரம் கட்சியின் தீர்மானத்திற்கு மாற்றமாக செயற்பட்டு பதவிகளை எடுத்த நான்கு எம்.பிக்களையும் கட்சியிலிருந்து நீக்கி விடுவதற்கு சுதந்திர கட்சித் தலைவர் மைத்திரிபால சிரிசேன தீர்மானித்துள்ளார்.

### மஸ்தான் மட்டுமே முஸ்லிம் புதிய இராஜாங்க அமைச்சர்!

புதிய ராஜாங்க அமைச்சர் நியமனத்தில் ஐந்து சிறுபான்மையினருக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. கலாநிதி சுரேன் ராகவன் உயர்கல்வி இராஜாங்க அமைச்சராகவும், வியாழேந்திரன் வர்த்தக இராஜாங்க அமைச்சராகவும், காதர் மஸ்தான் கிராமிய அபிவிருத்தி ராஜாங்க அமைச்சராகவும், அரவிந்தகுமார் கல்வி ராஜாங்க அமைச்சராகவும், சிவனேசதுரை சந்திரகாந்தன் கிராமிய வீதி அபிவிருத்தி ராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரசுக்கு அமைச்சுப் பதவிகள் இல்லை!

இந்த அமைச்சர் நியமனத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் எவரும் உள்வாங்கப்படவில்லை. இதற்கு முன் ராஜாங்க அமைச்சராக இருந்த முஷாரஃப், பைசல் காசிம், எச்.எம்.எம் ஹரிஸ் போன்றவர்களுக்கு இம் முறை அமைச்சர் பதவி கிடைக்கவில்லை.

அமைச்சர் பதவி தொடர்பாக ஹரிஸ இடம் கேட்ட போது,அமைச்சர் பதவி எதனையும் தான் ஏற்கப் போவதில்லை என இரு நாட்களுக்கு முன்பே இக் கட்டுரையாளரிடம் தெரிவித்தார்.

வன ஜீவராசிகள், வனவள பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட சி.வீ சானக்க குறிப்பிட்ட அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சருடன் தனக்கு செயற்பட முடியாது எனக் கூறி தனது அமைச்சினை மாற்றி தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.இதன்படி,இவருக்கு மின்சக்தி எரிபொருள் இராஜாங்க அமைச்சு வழங்கப்பட்டது.

பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் இந்த பட்டியலை தயார்படுத்தியதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

சத்திய பிரமாணத்தையடுத்து பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்துக்கு சென்று புதிய அமைச்சர்கள் சந்தித்துள்ளனர்.

### புதிய அமைச்சர்கள்

அமைச்சர்களுக்குரிய சம்பளம் வழங்கப்பட மாட்டாது. நாடு உள்ள நிலையில் சம்பளமின்றியே பணிபுரிய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ராஜாங்க அமைச்சருக்கு புறம்பாக நிதி ஒதுக்கப்பட மாட்டாது என்றும் திறைசேரி தகவல்கள் தெரிவிக்கின்றன.

கஞ்சாவை ஏற்றுமதி செய்து டொலர் சம்பாதிக்கத் தயாராகும் ராஜாங்க அமைச்சர் டயானா!

புதிய சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள டயானா கமகேயிற்கு நியமனக் கடிதத்தை கையளிக்கும் போது ஜனாதிபதி அவரிடம் நாட்டுக்குள் டொலரைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். டயானா கமகே கஞ்சாவை சட்டபூர்வமாக்க வேண்டும் என்றும் விலைமாதர் தொழிலை சட்டபூர்வமாக்க வேண்டும் என்றும் நீண்ட காலமாக கூறிவருகிறார். அமைச்சுப் பதவி ஏற்ற பின்பு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த டயானா கமகே,

கஞ்சாவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நாட்டுக்குள் டொலரை சம்பாதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். கஞ்சா ஏற்றுமதி மூலம் அடுத்த ஆண்டு பெரும் தொகையான டொலரைச் சம்பாதிக்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் டயானா தெரிவித்தார்.

நாடு வங்குரோத்து நிலையில் இருக்கும் போது 37 அமைச்சர்கள் புதிதாக நியமிக்கப்பட்டதனை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பலமாக கண்டித்துள்ளது. நாட்டின் பணவீக்கம் 94 வீதமாக இருக்கும் போது மக்களுக்கு உண்பதற்கு வசதி இல்லாதபோது 37 அமைச்சர்களைப் புதிதாக நியமிப்பது எப்படி நியாயமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்த கருத்துக்கு பதிலளித்த மொட்டுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே பதிலளித்துப் பேசினார்.

அமைச்சர்கள் நியமனம் பற்றி பேசினீர்கள் நீங்கள் கூறுவது உண்மை தான். இரவு தொலைக்காட்சியைப் பார்க்கும் போது மக்கள் மத்தியில் விரக்தி ஏற்படும். உங்கள் கூற்று நியாயமானது. அமைச்சர்கள் புதிதாக நியமிக்கப்பட்ட அனைவருக்கும் சம்பளம் வழங்கப்பட மாட்டாது.

### பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சம்பளம் மட்டுமே வழங்கப்படும்.

உங்கள் அரசாங்க காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கைக்கு 40 லட்சம் வழங்கப்பட்டதனை மறக்கவும் கூடாது. சகல வசதிகளுடன் இந்த அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தால் தவறு என நாம் ஏற்றுக் கொள்வோம்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் இதற்குப் பதிலளித்துப் பேசிய போது இன்று அமைச்சர் பதவிகளைப் பெற்றோர், சம்பளம் பெறுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் வாகனங்களை எடுக்கிறார்கள். உத்தியோகபூர்வ பங்களிப்பு கிடைக்கின்றது. பணியாளர் குழாம் கிடைக்கின்றது.அதில் மூவருக்கு வாகனம் கிடைக்கின்றது. சாரதிமாரும் கிடைக்கின்றார்கள்.சம்பளம் 54 ஆயிரம் ரூபா கிடைக்கின்றது. அமைச்சருக்குரிய பதினையாயிரம் மட்டும் பெறுவதில்லை. இதனை சொல்லி யாரை ஏமாற்றப் போகிறார்கள்.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் விஜித ஹேரத் பேசுகையில்,

இந்த அமைச்சரவை தான் நாட்டுக்கு சுமையாக இருக்கின்றது. பொருளாதாரம் இந்தளவு வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் காலிமுகத்திடல் அரகலய போராட்டத்தைத் தாக்கிய பாராளுமன்றத்துக்கு மிளகாய்த் தூள் அடித்தவர்களுக்கும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. சீனாவிலிருந்து குப்பை,பசளை கொண்டுவந்தவருக்கும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

### அனேக எம்பிக்கள் வருமானம் குன்றியவர்கள் என்கிறார் சனத் நிசாந்த!

புதிதாக நியமிக்கப்பட்ட ராஜாங்க அமைச்சர்களுக்குரிய சம்பளமோ, வசதிகளையோ பெற மாட்டார்கள் என அரசின் முக்கிய தலைவர்கள் தெரிவித்த போது,

நீர் வழங்கல் அமைச்சர் சனத் நிசாந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் குறைந்த வருமானம் பெறுபவர்கள் இருப்பதனால் அவர்கள் சம்பளத்தை பெறாதிருப்பது அவர்களுக்குச் செய்யும் அநீதி என்று தெரிவித்தார். எனவே தாம் அமைச்சருக்குரிய சம்பளத்தைப் பெறுவதற்கு தீர்மானித்துள்ளதாக வெள்ளியன்று இடம்பெற்ற அமைச்சு பதவியேற்பு வைபவத்தில் தெரிவித்துள்ளார்.

### பிள்ளையானின் கட்சி மாநாட்டில் நாமல்!

தமிழர் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வருடாந்த மாநாடு வார இறுதியில் மட்டக்களப்பில் நடைபெற்றது. இம் மாநாட்டில் இம் முறை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அமைச்சர் சந்திரகாந்தனின் அழைப்பில் சென்ற அமைச்சருக்கு பிள்ளையான் ஆதரவு பெற்ற இளைஞர்கள் குதூகல வரவேற்புயளித்தனர். வருகை தந்திருந்த இளைஞர்களில் கூடுதலானோர் நாமலுடன் செல்பி படம் எடுப்பதில் ஆர்வம் காட்டினர்.

### பிரதி மேயர் இக்பால் மகனின் திருமணத்தில் ஜனாதிபதி!

கொழும்பு மாநகர பிரதி முதல்வர் எம்.ரி.எம் இக்பாலின் மகனின் திருமண வைபவம் காலிமுகத்திடல் கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.கட்டார் விமான சேவையில் பணிபுரியும் பிரதி மேயர் மகன்

திருமண வைபவத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட ஐக்கியதேசிய முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ,முன்னாள் அமைச்சர் ஏ. எச். எம் பௌசி உட்பட முஸ்லிம் அமைச்சர்கள் பலரும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். ஜனாதிபதி புதுமண தம்பதியினரை வாழ்த்தி அவர்களுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

### சந்திரிகாவின் மகன் விமுக்தி அரசியலுக்கு வருகிறார்!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆதரவுடன் செயற்படும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையில் இயங்கும் நவ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அதன் அரசியல் நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுக்கவுள்ளது. கட்சிக்கான அலுவலகம் பத்தரமுல்ல பிரதேசத்தில் சந்திரிக்கா அம்மையாரினால் ஆரம்பிக்கப்பட்டது. பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வின் போது சந்திரிக்கா அம்மையார் முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவருமான மைத்திரிபால பற்றிக் கேட்டபோது அவருக்கு பைத்தியம் என பதிலளித்தார்.

நவ ஸ்ரீலங்கா கட்சி இப்போது அமைப்பாளர்களை நியமிப்பதில் ஈடுபட்டுள்ளது. கம்பஹா மாவட்ட தலைவராக சந்திரிகா குமாரதுங்கவும், கொழும்பு மாவட்ட தலைவராக ஜீவன் குமாரதுங்கவும், களுத்துறை மாவட்ட தலைவராக குமார வெல்கமவும் நியமிக்கப்பட்டுள்ளார். சந்திரிகாவின் மகன் விமுக்தி குமாரதுங்க வை அத்தனகல்ல தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பதாக கட்சியின் தலைவர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

- நஸ்மின்




கம்பஹா மாவட்டத்தின் ஒரே முஸ்லிம் மகளிர் கல்லூரியாக காணப்படும் எமது பாடசாலையில் நடைபெறவுள்ள "பஸால் ஆப்தீன்" மூன்று மாடிக் கட்டிடத் திறப்பு விழா மைக்கல்லாகும்.

பாடசாலையின் வளர்ச்சிப் படிகளில் ஒரு எமது வேண்டுகோளுக்கிணங்க அல்ஹாஜ் பஸால் ஆப்தீன் அவர்களால் நீண்டகாலத் தேவையான வகுப்பறைகள, விஞ்ஞான ஆய்வுகூடம், வாசிகசாலை, ஆராதனை மண்டபம் என்பவற்றுடன் கூடிய மூன்று மாடிக்கட்டிடம் ஒன்றை தனது சொந்த நிதியில் இருந்து சமூகநலனையும், பெண்களின் கல்வியையும் கருத்திற்கொண்டு செய்யப்பட்டதாகும்.

இச்சேவையானது நிச்சயம் சமூக மாற்றத்திற்கு வித்திடும் என்பதுடன் நிலையான தர்மமான "ஸதகதுல் ஜாரியாவாக" அமையும் என்பது உறுதி.

அத்துடன் அவரது சுயவிருப்பின் பேரில் பல்துறை விளையாட்டு மைதானம், மலசலகூடத் தொகுதி ஒன்று ஆகியவற்றையும் எமக்கு அமைத்துத்

தந்திருப்பது அவரது பரந்த சேவைக்கு எடுத்துக்காட்டாகும்.

மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கு நன்றி செலுத்தாதவன் போன்றவனாவான் என்ற நபிமொழிக்கு ஏற்ப பாடசாலைச் சமூகம், கஹடோவிட்ட வாழ்மக்களும் அவருக்கு என்றும் நன்றியுடையோராவர்.

**எம்.எம்.எம். ஸர்ஜூன்**
அதிபர்
முஸ்லிம் மகளிர் கல்லூரி
கஹட்டோவிட்ட

# வெற்றி நடை போடும் கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா ம.வி.

OGA MEMBERS



L-R : Ms. M.Y.F. Shifana, Ms. M.S.F. Zameera, Ms. M.I.F. Inthisama, Mr. M.M.M. Sarjoon (Principal), Mrs. M.R.F. Fahmidha (D.P), Mrs. M.I.F. Hibishiya, Ms. F.F. Fasra

NON ACADEMIC STAFF WITH PRINCIPAL



L-R : Mrs. M.N. Rikzana Zainab, Mrs. A.M.F. Misrina, Mrs. M. Ansifa, Mr. M.M.M. Sarjoon (Principal), Mrs. A.S.F. Mushfika, Mrs. M.F.F. Rishana, Mrs. A.W.F. Shifana

SDEC MEMBERS



L-R : Mr. M.H.M. Ramsan, Mr. M.S.M. Asmy, Mr. M.S. Sulaiman, Mr. A.A.M. Shiraz (Secretary), Mr. M.M.M. Sarjoon (Principal), Mrs. M.I. Hibishiya, Mrs. M.I.F. Rizna

இலங்கைத் திருநாட்டின் மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் அத்தனகலைத் தேர்தல் தொகுதியில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிராமமே கஹட்டோவிட்ட ஆகும். கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்த எமது முன்னோர்கள் எமது ஊரிலும் 1903ம் ஆண்டு ஒரு கல்விக் கூடத்தினை தக்கியா மண்டபத்தில் அமைத்துக் கொண்டனர். 1920ம் ஆண்டு இக் கல்விக் கூடத்தினை அரசாங்கம் பொறுப்பேற்று "அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது.

காலப்போக்கில் பெண்களுக்கென தனியானதொரு கல்வி நிலையமொன்று தேவை என்பதை உணர்ந்த எமது ஊர் மக்கள் பாதிபிய்யாவிற்கு சொந்தமான காணியில் தற்காலிக கட்டடம் ஒன்றை அமைத்து அதைப் பெண்கள் பாடசாலையாக மாற்றிக் கொண்டனர். 1945ம் ஆண்டு இப்பாடசாலையையும் அரசாங்கம் பொறுப்பேற்று "அரசினர் பெண் பாடசாலை" என்ற பெயரில் இயக்கி வந்தது. ஆரம்பத்தில் சுமார் 67 மாணவிகள் மாத்திரமே சேர்ந்ததாக வரலாறு கூறுகின்றது.

இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை பின்வருவோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர்.

- ~ 1945 திரு.தங்கமுத்து
- ~ 1949 திரு.சு.மு.கு. யூசுப்
- ~ 1953 திருமதி. எஸ்.தம்பி ராஜா
- ~ 1968 திரு. P.கந்தையா
- ~ திருமதி. ஜூலைஹா அப்துல்லாஹ்
- ~ திருமதி. முஹ்மினா உம்மா
- ~ திரு. அப்துல் மஜீத்
- ~ திருமதி. அகீல்
- ~ 1981 திருமதி. S.I.M. ஹலீம்
- ~ 1983 திரு. M.T.M. அன்ஸாரி
- ~ 1994 திருமதி. M.J.F.பரீதா ஆதம் லெப்பை
- ~ 2009 திருமதி. M.R.F. பர்ஸானா
- ~ 2009 திரு. J.U.M. புஹாரி உடையார்
- ~ 2012 திருமதி. M.U. சானாஸ்
- ~ 2015 திருமதி. F.R.ரிஸ்னா
- ~ 2016 திருமதி S.A. இஸ்மத் பாத்திமா
- ~ 2017 திருமதி M.R.F. பஹ்மிதா
- ~ 2018 திரு M.M.M. ஸர்ஜூன்

எமது பாடசாலையின் வரலாற்றில் 1953 ம் ஆண்டு முதன்முதலில் S.S.C பரீட்சைக்கு இரு மாணவிகள் தோற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. இதற்குப் பின்னர் வேறு எந்தப் பெண்பிள்ளையும் S.S.C பரீட்சைக்கு தோற்றாத நிலையில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாக 1960 ம் ஆண்டுகளில் கல்வி வளர்ச்சியில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இந்த தசாப்தத்தில் க.பொ.த (சா.த) பரீட்சைக்கு மாணவிகள் தோற்றி சித்தியடைந்தனர்.ஆனால் 1977 இல் இப்பாடசாலையில் வகுப்புக்க்ள் 6 வரை குறைவடைந்ததாக பதிவுகள் கூறுகின்றன.

1978 ம் ஆண்டு காலப்பகுதிகளில் இப்பாடசாலை கம்பஹா மாவட்டத்திலுள்ள தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் கல்வி நிலையில் முதல் தரத்தில் இருந்ததாக பதிவுகள் பறைசாற்றுகின்றன.

இப்பாடசாலையின் பௌதீக வள மேம்பாட்டுக்காக ஊர்மக்கள் ,தனவந்தர்கள் முன்வந்து உழைத்ததன் பலனாக மின்சார வசதி ,குடிநீர் வசதி ,பாடசாலைக்கான தொழுகையறை போன்ற வசதிகள் பிற்காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டன.

பல சவால்களுக்கு முகம்கொடுத்து வந்த இப்பாடசாலை வருடாவருடம் கல்வி ரீதியிலும் இணைப்பாடரீதியான செயற்பாடுகளிலும் சாதனை படைக்கத் தவறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

படிப்படியாக வளர்சிச்சியடைந்து வந்த இப்பாடசாலையில் தரம் 6 வகுப்பைத் தொடங்குவதற்காக பா.அ.ச அங்கத்தவர்களும் நலன் விரும்பிகளும் தொடர்ந்து முயற்சித்ததன் பலனாக 2007-01-02 அன்று மீண்டும் தரம் 6 வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதில் சுமார் 20 மாணவிகள் சேர்ந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் ரிசாத் பதியுதீன் அவர்களின் உதவியால் மூன்று வகுப்பறைகளைக் கொண்ட ஒரு கட்டடம் பெற்றுக் கொள்ளப்பட்டது. பாடசாலைக்கான பள்ளி வாசல் வசதியை சவுதி அரேபியாவைச் சேர்ந்த அஷ்ஷெய்ஹ் அபூ நாஸிர் ரியாதி அவர்கள் அமைத்துத் தந்தார். இதனைப் பெற்றுத் தருவதற்காக பாடசாலை நலன் விரும்பிகள் அயராது உழைத்தனர்.

தொடர்ந்து நிலவிய இடநெருக்கடியை தீர்த்து வைப்பதற்காக இரண்டு வகுப்பறைகளைக் கொண்ட கட்டடம் ஒன்று தனவந்தர்களினதும் ஊர் மக்களினதும் உதவியைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டது.

எமது பாடசாலையின் மற்றுமொரு மைல் கல்லாக 2012 ம் ஆண்டு க.பொ.த. (சா. த) பரீட்சைக்கு முதற் தடவையாக மாணவர்கள் தோற்றி 73% ஆன சித்தியையும் பெற்றுக் கொண்டனர்.

2016ம் ஆண்டு வரை க.பொ.த (சா.த) உடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்த எமது பாடசாலையில் 2017 ம் ஆண்டில் உயர் தரக் கலைப்பிரிவு வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டது. இம்மாணவிகள் 2020 இல் தமது உயர் தரப் பரீடசைக்குத் தோற்றியதுடன் 100 % சித்தியையும் பெற்றுக் கொண்டனர். அத்துடன் இரண்டு மாணவிகள் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானமையும் குறிப்பிடத்தக்கது.

படிப்படியாக வளர்ச்சியடைந்த இப்பாடசாலைக்கு 6 வகுப்பறைகளைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று KUWAIT ISLAMIC CARE SOCITY நிறுவனத்தின் உறுப்பினர்களான HON .DR.SHEIKA YOOSUF AL QATAMI ,SAADH AL ANSARY அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மேல் மாகாணத்தில் துரித வளர்ச்சி அடைந்து வரும் பாடசாலையாக மிளிரும் எமது பாடசாலையில் கணனி ஆய்வுகூடம் ஒன்றின் தேவை நீண்டகாலமாக உணரப்பட்டு வந்தது. A.T.G நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. அல்ஹாஜ் பஸால் ஆப்தீன் அவர்களால் கடந்த 2019ம் ஆண்டு இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்ப்பட்டது.

இக்கணனி அறைத் திறப்பு விழாவின்போது பாடசாலையின் பௌதீக வளக் குறைபாடுகள் அவர் முன் சமர்ப்பிக்கப்பட்டது. இதனைப் பெரும் மனதொடு ஏற்றுக்கொண்ட இக்கொடை வள்ளல் அன்றே மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணித்துத் தருவதாக வாக்களித்தார். அவர் வாக்களித்த இம்மூன்று மாடிக் கட்டடமானது எதிர்பார்த்ததை விட மேலும் பல வசதிகளுடன் விஞ்ஞான ஆய்வுகூட இடவசதி, நூலக இடவசதி, மல சல கூடத் தொகுதி,வலைப்பந்து திடல் என்பவற்றையும் உள்ளடக்கியதாக மிகச்சிறப்பாக பூரணத்துவம் பெற்று அமையப்பெற்றிருப்பது எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமேயாகும்.

ACADEMIC STAFF



Seated L-R :
Mrs. M.M.K. Moufiya, Mrs. F.Rizna Ikram (V.P), Mrs. M.R.F. Fahmidha (D.P), Mr. M.M.M. Sarjoon (Principal), Mr. A.H.M. Imran, Mrs. M.S. Saliha, Mrs. A.R.S. Farhana, Mrs. M.R.K. Rizna, Mrs. M.D.N. Imama
Standing L-R :
Mrs. A.H.F. Rifka, Mrs. K.M.A. Farmila Begum, Mrs. M.S.I. Aneera, Mrs. M.N.F. Faroodha, Mrs. M.S.F. Fasmina, Mrs. A.S. Haleema, Mrs. M.L.F. Nisreen, Mrs. M.F.N. Masaya, Mrs. M.R.F. Fazmina, Mrs. M.J.F. Razana, Mrs. M.S.N. Fahmiya, Mrs. M.N.F. Rizwana, Mrs. E.A.N.A. Ekanayaka, Mrs. M.M.P. Ashra




PREFECTS OF SCHOOL - 2022



# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான ஊர்தி வழிப் போராட்டம்: யாழில் ஆரம்பம்





இலங்கை மக்களை வதைக்கும் கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

காலை 10 மணியளவில் யாழ். மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலிலிருந்து சிதறு தேங்காய் உடைக்கப்பட்டு ஆரம்பமான ஊர்தி வழிப் போராட்டம் காங்கேசன்துறை தொடக்கம் 25 மாவட்டங்களுக்கும் சென்று இறுதியில் அம்பாந்தோட்டை நகரைச் சென்றடையவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பும் இணைந்து முன்னெடுக்கும் இந்தக் கையெழுத்துத் திரட்டும் பிரசார நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர்.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட காலிமுகத்திடல் போராட்டச் செயற்பாட்டாளர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் தலைவர் கி. சேயோன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த ஊர்தி வழிப் போராட்டம் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று கையெழுத்தைச் சேகரிக்கவுள்ளதுடன் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# தென்கிழக்கு பல்கலையில் இதழியல் கற்கை நெறியினை மீண்டும் ஆரம்பிக்குமாறு சிலோன் மீடியா போரம் கோரிக்கை!

(நூருல் ஹுதா உமர்)



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர் மற்றும் சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (09) வெள்ளிக்கிழமை உபவேந்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கை நெறியினை மீண்டும் ஆரம்பிக்குமாறு சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் கோரிக்கை விடுத்தார்.

இக்கற்கை நெறியினை மேற்கொள்வதற்கு ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் ஆர்வமாக இருப்பதாக தன்னிடம் விரும்பம் தெரிவித்துள்ள நிலையிலேயே இக்கோரிக்கையினை முன்வைப்பதாக உபவேந்தரிடம் கலாநிதி றியாத் ஏ.மஜீத் சுட்டிக்காட்டினார்.

மேலும் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர் பதவியேற்று ஒரு வருடப் பூர்த்தியை நினைவுகூர்ந்து நினைவுப் பரிசொன்றினை சிலோன் மீடியா போரத்தின் சார்பில் றியாத் ஏ.மஜீத் வழங்கி வைத்தார்.

# அஹமத் ஸித்னிமர்ஸூக் சமாதான நீதிவானாக நியமனம்



பிரபல இரத்தினக்கல் வியாபாரியும் சமூகசேவையாளருமான பேருவளைசீனன் கோட்டையைச் சேர்ந்த அஹமத் ஸித்னிமர்ஸூக் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றார்.

கல்லூரி வாழ்க்கையை முடித்துக் கொண்ட இவர் இரத்திணக்கல் வியாபாரத்தை தமது தொழிலாகக் கொண்டு செயற்படுகிறார்.

அன்று பேருவளையில் சிறந்து விளங்கிய உதைபந்தாட்டக் கழகமான மூன் விளையாட்டுக் கழகத்தின் சிறேகூஷ்ட வீரராகவும் சகலராலும் விரும்பிப் பேசப்பட்ட உதைபாந்தாட்ட கோல் காப்பாளராக (Goal Keeper) சிறந்துவிளங்கினார்.

மேலும், அவர் கிரிகட் விளையாட்டுக்களிலும் ஆர்வம் கொண்டு சகலதுறை ஆட்டக்காரராகவும் காணப்பட்டார். விளையாட்டு ரசிகர்களின் நல் ஆதரவையும் பெற்றார்.

சமூகநோக்கில் சமூகஅமைப்புக்களில் தன்னை இணைத்துக் கொண்டு களமிறங்கிய அஹமத் ஸித்னிமர்ஸூக் களுத்துரையைச் சேர்ந்த முன்னாள் ஓய்வுபெற்ற அதிபர் எம்.எஸ்.ஏ. மர்ஸூக், சித்தி ஹபீலா யூஸூப் ஆகியோரின் புதல்வரும் பேருவளை நகர சபை ஸ்தாபகத் தலைவரான மர்ஹூம் ஐ.எல்.எம் யூஸூப் அவர்களின் பேரனுமாவார்.

தகவல் - ஏ.எம்.முஹம்மத் ஸப்வான் மர்ஸூக்

# 10 கோடி செலவில் கிழக்கில் மின் உயர்த்தியுடன் அமைக்கப்பட்ட முதலாவது மூன்று மாடி பாடசாலை கட்டடம் திறந்து வைப்பு



(நூருள் ஹுதா உமர்)

மட்டக்களப்பு மத்தி வலயத்திற்குற்பட்ட காத்தான்குடி கல்விக்கோட்டத்தின் மீரா பாலிஹா மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மூன்று மாடி கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் யூ.எல். மன்சூர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக பங்கேற்று கட்டடத்தினை திறந்து வைத்தார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி எஸ். எம்.எம்.எஸ். உமர் மௌலானா காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பர் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது கடந்த வருடம் க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் சகல துறைகளிலும் உயர் சித்தி அடைந்த மாணவிகள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் போது கட்டடத்தினை அமைப்பதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி கொளரவிக்கப்படமை குறிப்பிடத்தக்கது.

# மேசைப் பந்து வெற்றியீட்டியுள்ள சம்மாந்துறை தேசிய பாடசாலை!



மாகாண மட்ட மேசைப் பந்து (Table Tennis)16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளது.

மட்டு. சிசிலியஸ் பெண்கள் கல்லூரியில் நேற்றுமுன்தினம் (09) இந்தப் போட்டி இடம்பெற்றுள்ளது.

12 வலயங்கள் பங்குபற்றிய இப் போட்டியில் சம்மாந்துறை தேசிய பாடசாலையும் பங்கேற்றிருந்தது.

இப் போட்டிக்காக பாடசாலை ஆசிரியர் எம்.ஆர்.எம். இர்ஷாட் தலைமையிலான மாணவர் குழுவே பங்கேற்றிருந்தனர்.

மேலும், குறித்த மாணவர்களை இவ் விளையாட்டிற்கான பயிற்றுவிப்பில் பாடசாலையின் மாணவர் சங்க உறுப்பினரும், விளையாட்டு பயிற்றுவிப்பு ஆசிரியருமான கே.எல். ஸக்கி தனது பயிற்றுவிப்பு பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன், பாடசாலையின் ஏனைய ஆசிரியர்களின் பங்களிப்பு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நற்பிட்டிமுனை லாபிர் வித்தியாலயத்தில் மரநடுகை

(எம்.என்.எம்.அப்ராஸ், ஏ.எல்.எம்.ஷினாஸ்)



கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட நற்பிட்டிமுனை லாபிர் வித்யாலயத்தில் கல்முனை பொலிஸ் நிலையம் மற்றும் பாடசாலை நிர்வாகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தேசிய மர நடுகை நிகழ்வு பாடசாலை அதிபர் வை.எல்.ஏ. பஷீர் தலைமையில் நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்ஸீன் பக்கீர் வழிகாட்டலில் கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக பிரதம அதிதியாக கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.



# ஐ.நா மனித உரிமை அமர்வுகளுக்கு இலங்கை தூதுக்குழுவை அனுப்புவதை எவ்வாறு நியாயப்படுத்தலாம்?

## ஜனாதிபதி சட்டதரணி எம்.எம். சுஹைர் கேள்வி




மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரிக்க ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பொறிமுறையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், எதிர்வரும் ஜெனீவா ஐ.நா மனித உரிமை அமர்வுகளுக்கு இலங்கை தூதுக்குழுவை அனுப்புவதை எவ்வாறு நியாயப்படுத்தலாம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டதரணி எம். எம். சுஹைர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் இலங்கயைில் 2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து விசாரனைகளை நடத்த வெளிநாட்டு துப்புத்துளக்கும் நிறுவனங்களை இலங்கை அனுமதித்ததன் பின்னணியில் அமைச்சர் சப்ரியின் நிலைப்பாடு கேள்விக்குறியது என சுஹைர் குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியின் கீழ் தெஹ்ரானுக்கான தூதுவராகவும் கடமை புறிந்த சுஹெய்ர் மேலும் கருத்துக் கூறுகையில்,

மோசமடைந்து வரும் பொருளாதார நெருக்கடி மற்றும் நாளுக்கு நாள் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க வெளிநாடுகளின் உதவியை அதிகளவில் இலங்கை நம்பியிருக்கும் இது போன்றதொரு தருணத்தி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கூறப்படும் மனித உரிமை தொடர்பான குற்றச்சாட்டுக்களை நமது அரசாங்கம் ஆக்கப்பூர்வமாக அனுகுவது அவசியம் எனவும் கூறினார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் ஊடகங்களுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கருத்துத் தெரிவித்த போது போர் குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரிக்க வெளிநாட்டு குற்ற ஆய்வு அமைப்புக்களை இலங்கைக்குள் அனுமதித்தல், இலங்கை பிரஜைகளுக்கு வெளி நாடுகளில் குற்றம் சுமத்துதல், கலப்பு நீதிபதிகளை வரவழைத்தல் போன்ற நடவடிக்மைககளுக்கு இலங்கை அரசாங்கம் உடன்படாது எனவும் இவை அரசியலமைப்பிற்கு எதிரானவை என்றும் கூறியிருந்தார்.

'இலங்கைப் பிரஜைகள் மீது வெளிநாடுகளில் குற்றம் சுமத்தல், வெளிநாட்டு நீதிபதிகளை இலங்கையில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க இடம் கொடுத்தல் போன்றவற்றிக்கு அலி சப்ரி எதிர்ப்பு தெரிவிப்பது நியாயமானதுதான் என நானும் ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆனால் இலங்கையின் நீதிபதிகளின் ஒப்புதல் இன்றி 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை விசாரிப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்களை அனுமதி அளித்த பின்னணியில், இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கான ஆதாரங்களை சேகரிக்க ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பொறிமுறைக்கு எவ்வாறு அரசாங்கம் அனுமதி மறுக்கலாம் என்ற கேள்வி எழுகின்றது' என சுஹைர் சுட்டிக்காட்டினார்.

'எவ்வித சம்பந்தமும் இல்லாத வெளிநாட்டு புலனாய்வாளர்களை உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள் நடந்த இடங்களுக்குச் செல்லவோ, இலங்கை புலனாய்வாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கவோ அல்லது புலனாய்வுக் குழுவில் அங்கம் வகிக்கவோ இலங்கையில் எந்தவொரு நீதவானாலும் அப்போது அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதை நிச்சயமாக றன்மதிப்பிற்குரிய ஒரு சட்டத்தரணி என்ற வகையில், அமைச்சர அலி சப்ரி அறிந்திருக்க வேண்டும்.

அந்த சமயத்தில், ஈஸ்டர் தாக்குதல்கள் பற்றி விசாரிப்பதற்காக வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறைகளை நாட்டிற்குள் அனுமதிப்பவர்கள் அதன் மூலம் பிற்காலத்தில் இலங்கயில் நடைபெறும் குற்றச் செயல்களை விசாரிப்பதற்கு வெளிநாட்டு நீதிபதிகள் இலங்கைக்கு கொண்டு வருவதற்கான அடித்தளத்தை இடுகின்றார்கள் என் நான் ஊடக அறிக்கைகள் மூலம் பகிரங்கமாகவே எச்சரித்து வந்தேன்' என்றும் சுஹெயிர் ஞாபகப்படுத்தினார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவு (FBI) மற்றும் ஆஸ்திரேலிய பெடரல் போலீஸ் (AFP) ஆகியவை இலங்கை குற்றப்புளாய்வுத் திணைக்களத்துடன் இணைந்து ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை நடத்தி வருவதாக அப்போதைய பொது பாதுகாப்பு அமைச்சர் 19 மே 2021 அன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பணியகம் (CIA) மத்திய புலனாய்வு முகவர் அமைப்பு போன்ற ஊதியத்திற்கு பணியாற்றும் 'எஜமான் விசுவாசமிக்க' அமெரிக்க நிறுவனங்களும், ஐ.நா மனித உரிமை ஆணையமும் நிலைப்பாட்டால் பாரிய வித்தியாசம் உள்ள நிறுவனங்களாகும்.

கடந்த சுமார் 40 ஆண்டு காலமாக அமெரிக்க அரசின் பூலோக அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்காக அந்நாட்டின் CIA மற்றும் FBI போன்ற நிறுவனங்கள் அப்பட்டமான பொய்களை கூறியவண்ணம் ஈராக், லிபியா, சிரியா போன்ற மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் கியுபா போன்ற பிராந்திய நாடுகளிலும் செயற்பட்ட சட்ட விரோத மற்றும் நியாயமற்ற விதங்கள் பற்றி உலகறியும்.

ஆனால் ஐ.நா மனித உரிமை ஆணையம் அவ்வாறான பக்க சார்புள்ள நிறுவனம் அல்ல எனவும் சுஹெயிர் சுட்டிக்காட்டினார்.

இது நாம் நாடு சர்வதேச நாணய நிதித்தின் உதவியை எதிர் நோக்கியிருக்கும் ஒரு முக்கிய தருணமாகும்.

அமைச்சர்கள் அலி சப்ரி மற்றும் விஜயதாச ராஜபக்ஷ இருவரும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாம் சுமுகமதாக பெறும் வித்திலானதொரு விவேக மிகு அனுகுமுறையை ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் கையாள்வார்களா? இதையே பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள 22 மில்லியன் இலங்கையர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

# ஆசிய சம்பியனானது இலங்கை வலைபந்தாட்ட அணி!




ஆசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் சிங்கப்பூரை வீழ்த்தி இலங்கை அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

இதனூடாக இலங்கை வலைப்பந்து அணி 6ஆவது முறையாக ஆசிய வலைப்பந்து கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

சிங்கப்பூருக்கு எதிரான ஆட்டத்தில் 63-53 என்ற கணக்கில் இலங்கை அணி வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு தில்லை மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தின் தீர்த்தோற்சவம்!




(கி.ஷனுஸ்காந்)

மட்டக்களப்பு தில்லை மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் சிறப்புடன் ஆரம்பமானது.

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு தில்லை மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் சென்ற 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபது நாட்கள் சிறப்புத்

திருவிழாக்கள் இடம்பெற்று

21ம் நாளான நேற்று 10.09.2022 திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவம் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடை சூழ்ந்து அரோகரா என்ற கோசத்துடன் மிக சிறப்பாக நடைபெற்றததோடு தீர்த்தமாடிய பின்னர் கன்னியர்கள் ஆலார்த்தி எடுத்து மூச்சடைத்து மயங்கிவிழும் அற்புதமான அமானுஷ்யமான அதிசய நிகழ்வும் நடைபெற்றது.

மண்டூர் கந்தசுவாமி ஆலயமானது

மட்டக்களப்பின் திருப்படைக் கோயில்களில் ஒன்றாக விளங்கினாலும் ஆகம நெறிசாரா பூசைகள் நிகழும் ஆலயங்களில் கதிர்காமத்தை ஒத்திருப்பதால் சின்னக்கதிர்காமம் என்று சிறப்பித்துக் கூறப்படும் புண்ணிய தலமாகவும்

மேலைத்தேய அந்நியர் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயத்தை அவர்கள் அழிப்பதற்காக முற்பட்ட போது முருகப்பெருமான் குளவிப்படை கொண்டு அவர்களை தடுத்து நிறுத்தியதாக வரலாற்று ரீதியான கதையொன்றும் உள்ளது.

இவ்வாறு வேண்டுவோர்க்கு வேண்டும் வரமளிக்கும் மண்டூர் முருகப் பெருமானது உற்சவகால நிகழ்வுகளில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் கலந்துகொண்டமை என்பது குறிப்பிடத்தக்கது.

# பால் பண்ணை வளர்ப்பு உற்பத்தி தொடர்பாக ஆராய்வு




ஹட்டன் கமுகுவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் பால் பண்ணைக்கு (ரொத்தர்ஸ் பார்ம்) விஜயம் மேற்கொண்டு பண்ணை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் கடந்த புதனன்று பார்வையிட்டார்.

மேலும் அங்கு மலையகத்திலுள்ள இளைஞர், யுவதிகளின் சுயத்தொழிலை ஊக்குவிக்கும் முகமாகவும் பால் உற்பத்தியை அதிகரிப்பதும் இளைஞர்களின் வேலையற்ற பிரச்சினைக்கு தீர்வாகவும் ஆராயப்பட்டதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை பரப்புரையின், பால் உற்பத்திக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பான தூரநோக்கு சிந்தனைக்கு அமைய தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்தார்.

அதுமாத்திரமன்றி தேசிய நீரோட்டத்திற்கு அதிகளவிலான பால் உற்பத்தியை மேற்கொள்வதற்கும், மலையக இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான செயற்திட்டம் இதனூடாக செயல்படுத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச பேச்சுப் போட்டியில் சம்மாந்துறை மாணவி பாத்திமா மின்ஹா சாதனை!



ஸ்கொட்லாந்து சங்க ,லக்கிய ஆய்வு நடுவகத்தின் ஏற்பாட்டில் 06-10 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான "கல்வி கண் போன்றது" எனும் தலைப்பில் நடைபெற்ற சர்வதேச பேச்சுப் போட்டியில் சம்மாந்துறை அல்-அர்சத் மகா வித்தியாலய தேசிய பாடசாலை மாணவி வெற்றியீட்டியுள்ளார்.

இந்தியா, மலேசியா, கனடா, ,லங்கை, அமெரிக்கா, ஸ்கொட்லாந்து, ,ங்கிலாந்து, கட்டார், சிங்கப்பூர், ஜெர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற பல நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் பங்குபற்றிய ,வ் உலகளாவிய பேச்சுப் போட்டியில், ,லங்கை சார்பில் கலந்து கொண்டு சர்வதேச ரீதியில் மூன்றாம் ,டத்தினை சம்மாந்துறையை வசிப்பிடமாகக் கொண்ட தேசபந்து ஜலீல் மற்றும் எம். ஆயிஷா ஆகியோரின் ஏக புதல்வியும் சம்மாந்துறை அல்- அர்சத் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மாணவியுமான ஜலீல் பாத்திமா மின்ஹா பெற்றுக்கொண்டார்.

இம் மாணவி இதற்கு முன்னர் தமிழ்நாட்டு ,லக்கிய கழகம் வழங்கிய ",ந்திய தேசத்தின் ஜனாதிபதி அப்துல் கலாம் கனவுக் கண்ணி விருது", தமிழ் நாட்டு அரசின் "இளமாமணி காந்தி விருது" மற்றும் தமிழ்நாடு அரசு வழங்கிய "சிறந்த மாணவர் விருது" போன்றவைகளையும் சுவீகரித்தவர் என்பதோடு, அண்மைக்காலமாக இளம் இலக்கிய ஆர்வலராய் கவிதைகள் படைப்பதிலும் ஆர்வம் காட்டி வரும் இவர், "மின்மினியின் கீறல்கள்" எனும் கவிதை நூல் ஒன்றினை மிக விரைவில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலையில் பாடசாலை அதிபர் எம். அப்துல் ரஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அம்மாணவி மற்றும் அவருக்குப் பயிற்சியளித்த ஆசிரியர்கள் உட்பட அவரது பெற்றோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் போது பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) ஏ.எல். எம். மஜீட், சம்மாந்துறை கோட்டக் கல்வி அதிகாரி எம்.ஏ. சபூர் தம்பி மற்றும் பிரதி அதிபர் (நிருவாகம்) எம். அபூபக்கர், பிரதி அதிபர் (கல்வி அபிவிருத்தி) எம்.ஏ.எம். சிராஜ், பகுதித் தலைவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் மற்றும் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# கிண்ணியா மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு வைபவம்



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட தி/கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யில் 2021(2022) ஆம் ஆண்டிண் கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களுக்கான பரிசளிப்பும் கௌரவிப்பு நிகழ்வும் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் திருமதி நாதிரா ஷகீட் அமீன் பாரி தலைமையில் (05) ,டம்பெற்ற குறித்த கௌரவிப்பு நிகழ்வில் 62 மாணவிகள் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

இம் முறை மருத்துவத் துறைக்கு 5 மாணவிகள் தெரிவாகியமை மேலும் கல்லூரிக்கு வலுச் சேர்க்கிறது. 2350 மாணவிகளையும் 123 ஆசிரியர்களையும் 21 கல்வி சாரா ஊழியர்களையும் கொண்ட இக் கல்லூரி எதிர்காலத்திலும் பல சாதனைகளை படைக்கும் என எதிர்பார்க்கிறேன் என கல்லூரியின் முதல்வர் திருமதி நாதிரா ஷகீட் அமீன்பாரி தெரிவித்தார்.

# இரண்டாம் எலிசபெத் ராணியின் வாழ்வை உணர்த்தும் படங்கள்


பிறப்பின் போது எடுக்கப்பட்ட படம்


ராணி தனது பிளாட்டினம் ஜுபிலி கொண்டாட்டங்களின் போது லண்டனில் ட்ரூப்பிங் தி கலர் அணிவகுப்பை ஜூன் 2022 இல் பார்க்கும் காட்சி


மே 2022 இல் மேற்கு லண்டனில் உள்ள பாடிங்டன் ஸ்டேஷனில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட எலிசபெத் பாதையின் திறப்பு விழாவில் கலந்து கொண்ட ராணி ரயில் டிக்கெட்டை வாங்கும் படம்


2022 பெப்ரவரியில் ராணி தனது பிளாட்டினம் ஜுபிலியின் தொடக்கத்தைக் கொண்டாட கேக் வெட்டும் காட்சி .


ராணி பாராளுமன்றத்தை மே 2021 இல் உரை ஆற்றுகிறார்.இது அவரது கணவரின் மரணத்திற்குப் பிறகு அவரது முதல் பெரிய கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்


ராணி, பக்கிங்ஹாம் அரண்மனையில் போரிஸ் ஜான்சனை சந்தித்த போது


ஜுலை 2018 இல் வின்ட்சர் கோட்டைக்கு டிரம்பின் வருகையின் போது எடுக்கப்பட்ட படம்


ராணி தனது புதிய கொள்ளுப் பேரன் ஆர்ச்சியை பார்க்கும்போது


ஜூன் 2020 இல் பிலிப்பின் 99வது பிறந்தநாளை முன்னிட்டு எடுத்த புகைப்படம்


அரியானா கிராண்டே இசை நிகழ்ச்சியிலிருந்து மக்கள் வெளியேறிய போது நடந்த குண்டுவெடிப்பில் ஈவி காயமடைந்த எவி மில்ஸ் உடன், 14, மே 2017 இல் இங்கிலாந்தின் மான்செஸ்டரில் உள்ள மருத்துவமனையில் எலிசபெத் பேசும் படம்


ராணியும் இளவரசர் பிலிப்பும் 2016 இல் லண்டனில் தனது 90வது பிறந்த நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம்


ஏப்ரல் 2016 இல் ராணி தனது கொள்ளுப் பேரக்குழந்தைகள் மற்றும் இரண்டு இளைய பேரக்குழந்தைகளுடன் எடுக்கப்பட்ட படம்


மே 1975 இல் டோக்கியோவிலிருந்து புறப்படுவதற்கு சற்று முன், ராணியும் இளவரசர் பிலிப்பும் விமானப் பாதையில் இருந்து கை அசைத்த படம்.


இளவரசர் சார்ல்ஸ் 1969 இல் வேல்ஸ் இளவரசராக பதவியேற்பு விழாவின் போது


ராணி இரண்டாம் எலிசபெத் தனது மூத்த மகன் இளவரசர் சார்லஸுடன் 1969 இல் எடுத்த புகைப்படம்


தந்தை 56 வயதில் நுரையீரல் புற்றுநோயால் இறந்ததால், எலிசபெத் பெப்ரவரி 1952 இல் அரியணை ஏறினார். ஜூன் 2, 1953 அன்று அவரது முடிசூட்டு விழாவின் போது எடுத்த படம்


நவம்பர் 20, 1947 இல், எலிசபெத் கிரீஸ் மற்றும் டென்மார்க்கின் அரச குடும்பங்களில் பிறந்த பிரிட்டிஷ் கடற்படையின் லெப்டினன்ட் இளவரசர் பிலிப்பை மணந்தார். ஒரு பிரிட்டிஷ் குடிமகனான அவர் தனது கிரேக்க பட்டத்தை துறந்த பிறகு, பிலிப் அவரது ரோயல் ஹைனஸ் இளவரசர் பிலிப், எடின்பர்க் டியூக் ஆனார்.


14 வயதான எலிசபெத், அக்டோபர் 13, 1940 அன்று தனது முதல் ஒளிபரப்பில், இங்கிலாந்தின் குழந்தைகள் மகிழ்ச்சியும் தைரியமும் நிறைந்தவர்கள் என்று பேசிய போது



வடக்கு அயர்லாந்தின் பெல்ஃபாஸ்டில் ஒரு சிறுவன் ஜூன் 2014 இல் ராணியோடு செல்ஃபி எடுக்கும் காட்சி


பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்த போது, ராணியும் இளவரசர் பிலிப்பும் 1997 இல் இளவரசி டயானாவின் துயர மரணத்திற்குப் பிறகு அவருக்கு மலர் அஞ்சலி செலுத்திய படம்


ராணி 1977 இல் நியூசிலாந்தில் தனது அரச சுற்றுப்பயணத்தின் போது கூட்டத்தை சந்தித்தார்


மே 1982 இல் விண்ட்சரில் ஒரு குதிரை கண்காட்சியின் போது எலிசபெத் தனது கணவரின் படங்களை எடுக்கும் காட்சி


ஏப்ரல் 21, 1947 அன்று இளவரசி எலிசபெத் தென்னாப்பிரிக்காவின் நடால் தேசிய பூங்காவின் டிராகன்ஸ்பெர்க் மலைகள் சூழ அவரது 21வது பிறந்தநாளைக் கொண்டாடிய போது


இளவரசி எலிசபெத் தனது லண்டன் வீட்டில் 1928 இல் எடுத்த புகைப்படம்


இளவரசி எலிசபெத் 1933 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஸ்கொட்லாந்தின் பால்மோரலுக்கு சென்ற போது அவரது மாமா எட்வர்ட் இளவரசர் வேல்ஸ /டன் எடுத்த படம்.


எலிசபெத் அரசிக்கு குதிரைகள் என்றால் கொள்ளை பிரியம். 1940 இல் இங்கிலாந்தின் விண்ட்சரில் குதிரை சவாரி செய்யும் படம்

**படங்களும், தகவல் தொகுப்பும்: அப்ரா அன்சார்**

# கர்ப்பிணி பெண்களுக்கு போசாக்கு உணவு பொருட்கள் வழங்கி வைப்பு





**(செ. திவாகரன்)**

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா பிரதேசத்தில் 40 கர்ப்பிணி பெண்களுக்கு

போசாக்கு உணவு பொருட்கள் வழங்கும் வேலைத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா பிரதேச சபை புதிய கட்டிடத்தில் விநியோகிக்கப்பட்டன.

நானுஓயா பிரதான நகரில் உள்ள ாயசனறயசந கடையின் உரிமையாளர் திருச்செல்வம் கண்ணாவில் சொந்த பணத்தில் வழங்கப்பட்ட இந்த உணவு பொதிகளில்

கர்ப்பிணி பெண்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகள் கொண்ட , குறிப்பாக, கர்ப்பிணிப் பெண்கள் சரிவிகித உணவு உட்கொண்டால் தான் வயிற்றில் உள்ள சிசுவிற்கும் போதுமான ஊட்டச்சத்து கிடைக்கும் இதற்கு பொருத்தமான பெறுமதியான பொருட்கள் இப் பொதியில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியில் , பொருட்களின் விலை ஏற்றத்தினை கண்டுகொள்ளாமல் இவ்வாறாக செயற்படும் திருச்செல்வம் அவர்களை பலரும் வாழ்த்துகின்றனர்

இன்நிகழ்வில் நானுஓயா பொலிஸ் பொறுப்பதிகாரி , நுவரெலியா பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் பல சமூக ஆர்வலர்கள் மற்றும் சமூக சேவை நோக்கம் கொண்ட இளைஞர்கள் ஆகியோரும் கலந்து கலந்து இந்த உணவு பொருட்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# பைசால் காசிமின் பாராட்டுக்குரிய பாராளுமன்ற பேச்சு



**(துறையூர் ஏ.கே மிஸ்பாஹுல் ஹக்)**

பாராளுமன்றத்தில் பா.உறுப்பினர் பைசால் காசிம் பேசுவது மிக அரிது. அவர் சாதாரணமாக பேசும் போதே, சில தடுமாற்றங்களை அவதானிக்க முடியும். இன்றைய அவரது பாராளுமன்ற உரை மிக நேர்த்தியாக இருந்தது. நிந்தவூரானது கடலரிப்பால் மிக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை பாதுகாக்க ஒதுக்கப்பட்ட 20 மில்லியன் பணம் உடனடியாக எவ்வாறு கிடைத்தது என்பதை அவர் தெளிவாக விளக்கியிருந்தார். அது வேறு வழியில் கிடைக்க சாத்தியமா என்பது சந்தேகமே!

இந்த கடலரிப்பு பிரச்சினை பற்றி அரசியல் வாதிகள் பலரும் பேசினாலும், இந்த கடலரிப்பு பிரச்சினைக்கு துறைமுகம் தான் காரணம் என்பதை பேச தயங்குவார்கள். அதற்கு அரசியல் காரணங்கள் பலவுண்டு. இன்று பா.உறுப்பினர் பைசால் காசிம் எந்த அச்சமுமின்றி கடலரிப்புக்கு துறைமுகமே காரணம் என்பதை கூறியது மாத்திரமல்லாது, அது தேவையற்ற ஒன்று எனவும் பகிரங்கமாக கூறியிருந்தார். இந்த தைரியம் நிச்சயம் பாராட்டுக்குரியது.

அவர் குறித்த விடயத்தை வெளிப்படுத்தும் போது முன்னாள் மு.காவின் தலைவர் அஷ்ரபிற்கும் இந்நாள் தலைவர் ஹக்கீமுக்கும் எதிராக தனது கருத்து அமையாத வண்ணம் மிக நுணுக்கமாக உரையாற்றியிருந்தார். தேவைக்கில்லாமல் யாரையும் வம்பிற்கிழுக்காது விடயத்தையும் பேசுவது பேச்சின் சாதுர்யம் எனலாம்.

அவர் குறித்த உரையை சிங்கள மொழியில் அமைத்திருந்தமை இன்னும் சிறப்புக்குரியது.

அவ்வுரை தமிழில் அமைந்திருந்தால் எம்மவர்கள் அதிகம் பாராட்டி இருப்பார்கள். செல்ல வேண்டிய இடத்துக்கு சென்றிருக்காது.

கடலரிப்புக்கு உடனடி தீர்வு அவசியம். இது அரசியல் செய்யும் விடயமல்ல.

# வதிவிட பயிற்சிப்பாசறை







இஃகலபட தமிழ் வித்தியாலயத்தில் வதிவிட பயிற்சிப்பாசறையொன்று கடந்தவாரம் அதிபர் தினேஷ் தலைமையில் நடந்தேறியது.

கொரோனா மற்றும் நாட்டின் ஸ்தம்பித நிலையால் பாதிக்கப்பட்டிருந்த கல்வி மற்றும் இணைப்பாடவித செயற்பாடுகளை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் தரம் 06 -09வரையிலான மாணவர்களுக்கு இப்பாசறை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

பாசறையின் இறுதிநாள் நிகழ்வுக்கு சப்ரகமுவ மாகாண உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி சகுந்தலா கலந்துசிறப்பித்தது மட்டுமன்றி ரோயல் கல்லூரியில் இல்லாத சந்தோஷத்தை இங்கே நான் உணர்கிறேன் எனக்கூறியமை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய விடயமாகும்.

**பின்த் அமீன் -மாவனல்லை**



# தேசமான்ய மர்ஹூம் MA. பாக்கீர் மாக்காரின் 10-09-2022ஆம் திகதிய நினைவை முன்னிட்டு

தேசமான்ய மர்ஹூம் அல்-ஹாஜ் MA.பாக்கீர் மாக்கார் தென்னிலங்கை, பேருவளை என்ற கரையோரக் கிராமத்தில் குடியேறிய அராபியரான சேக் ஜமாலுத்தீன் அல்-தூமி என்பவரின் வழித்தோன்றலில் வந்த மருத்துவ குடும்பத்தைச் சேர்ந்த ஹக்கீம் அலியார் மரிக்கார் முகம்மது மரிக்கார் என்பவரின் புதல்வராவார்.

1917 ஆம் ஆண்டு மே மாதம் 12 ம் திகதி மருதானை பேருவளை என்னும் கிராமத்தில் பிறந்தார். 7 வயது வரை தனது ஆரம்பக்கல்வியை இலங்கையின் 1வது பெண்கள் கல்லூரியிலும் இரண்டாம் நிலைக் கல்வியை கொழும்பு சென் செபஸ்தியன் கல்லூரியிலும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியிலும் கற்றார்.

இரண்டாம் நிலைக் கல்வியைத் தொடர்ந்து 1939 ஆம் ஆண்டு இலங்கை சட்டக் கல்லூரியில் மாணவராக சேர்ந்து 1949 ம் ஆண்டு சட்டத்தரணியாக பட்டம் பெற்று வெளியேறினார்.

இளம் துடிப்பும் நல்ல படிப்பும் பண்பும் ஆற்றலுமுள்ள இவர் சீனன் கோட்டை பேருவளைச் சேர்ந்த உமறுலெவ்வை மரைக்கார் முகம்கமது றபாய் அவர்களின் மகன் சித்தி கதீஜா என்பவரைத் திருமணம் முடித்தார்.

இவர்களுக்கு ஒரு ஆண் மகன் இப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் அல்-ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மற்றும் தீனா, சாமீம், னைலா என்ற 03 பெண்பிள்ளைகளும் பிறந்தனர். தொடர்ந்து ஜெஸீலா என்ற பெண்ணை இரண்டாவதாக திருமணம் முடித்தார். இவருடன் யாசீர் என்ற ஆண் மகனும் ஹசீபா, பஸீஹா, பஹீமா என்ற 03 பெண் பிள்ளைகளும் பிறந்தனர்.

1947 ஆம் ஆண்டு பேருவளை நகர சபைத் தேரிதலில் போட்டியிட்டு அரசியல் வாழ்வுக்குள் கால் அடி வைத்தார். நகர சபைத் தேர்தலில் வெற்றியைத் தொடர்ந்து மேயராக, பேருவளைத்தொகுதியின் 1வது பாராளுமன்ற உறுப்பினராக, பிரதி சபாநாயகராக பழைய பாராளுமன்றத்தின் கடைசி சபாநாயகராகவும் புதிய ஜயவர்த்தபுர கோட்டே பாராளுமன்றத்தில் முதல் சபாநாயகராகவும் பதவி வகித்தார்.

1983ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி தனது சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு அமைச்சரவை அந்துஸ்த்துள்ள அமைச்சராக 1988ம் ஆண்டு ஜுன் மாதம் 31ம் திகதி பதவி வகித்ததைத் தொடர்ந்து தென்மாகான ஆளுனராக நியமிக்கப்பட்டனர்.

சபாநாயகராக இருந்த காலகட்டத்தில் எமது நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் நாட்டில் இல்லாத போது பதில் ஜனாதிபதியாகவும் கடமையாற்றியுள்ளனர். 1993ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ம் திகதி தனது ஆளுனர் பதிவியையும் இராஜினமாச் செய்து அரசியலில் இருந்து ஓய்வு பெற்றார்.

இவருடைய அரசியல் காலப்பகுதியில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி என்ற பாரிய இதயத்தை உருவாக்கி நாடு முழுக்க விஜயம் செய்து வாலிபர்களின் ஒற்றுமைக்காகவும் சமூகத்தின் கல்வி கலாச்சாரம் போன்ற இன்னோரன்ன விடயங்களுக்காகவும் பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல் கொடுத்தார். பாக்கீர் மாக்கார் அரசியல் பாசறையில் உருவாகியவர்கள் இன்று பல இடங்களிலும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றனர்.

தனது 80வது வயதில் 10-09-1997 ஆம் ஆண்டு பேருவளையில் காலமானார். அன்னாரின் ஜனாஸா பேருவளையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரின் மறைவுக்கு பிறகு இவரின் உன்னத பணியை இவரின் மூத்த புதல்வன் பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்தியாஸ் பாக்கீர் மேற்கொண்டு வருகின்றார் Bakeer Markkar Centre for National Unity என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி இன்று வரையும் அதன் சமூகப்பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

அகதிகளாக குடியேறிய வடமாகான இளைஞர்களின் கல்விக்காக புலமைப்பரிசில் திட்டங்களும் இந்நிலையத்தின் ஊடாக மேற்கொண்டு வருகின்றார்.

அல்-ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களின் சமூகப்பணி உயர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**ஏ.ஆதம்வாவா**
முன்னால் நிருவாகச் செயலாளர் (2001-2004)
அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம்
தலைவர்
மஹ்ஹாஸின்ல் உலூம் அரபிக் கல்லூரி,
பாலமுனை





**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

## மனநலமும் ஆலோசனையும்

# கோபமும் கெட்ட வார்த்தைகளும்



ஒருவரின் கோபத்தின் வெளிப்பாடு கெட்ட வார்த்தைகளாக வெளிப்படுவதன் காரணம் என்ன?

அனைத்து வலுவான, தீவிரமான உணர்ச்சிகளை வெளிப்படுத்த சிலர் கோபத்தின் போது அடிக்கடி கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். அசிங்கமான அவலட்சணமான வார்த்தைகளால் திட்டித் தீர்ப்பார்கள்.

கோபத்தையும் விரக்தியையும் விடுவிப்பதற்காக அல்லது வெளிப்படுத்தற்காக இப்படி மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவது ஒரு முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

சிலர் கோபத்தை சமாளிக்கும் வழிமுறையாக கெட்ட வார்த்தைகளை வெளிப்படுத்தலாம்.

கோபமாக இருப்பதை மற்றவர்களுக்குக் காட்டுவதற்கான ஒரு வழியாகும் கெட்ட வார்த்தைகளால் ஏசலாம்.

தனது கருத்தை ஒப்புக்கொள்ளாததால் ஏற்படும் வலி மற்றும் விரக்தி காரணமாக ஒருவர் கோபத்தில் கெட்ட வார்த்தைகளால் ஏசலாம்.

சிலர் சூழ்நிலையை சமாளிக்க முடியாமல் போவதால் கெட்ட வார்த்தைகளை வெளிப்படுத்தலாம்.

சிலர் சிறுவயதில் இருந்தே கோபத்தின் போது கெட்ட வார்த்தைகளை வெளிப்படுத்து பவர்களை பார்த்து தாமும் கோபத்தில் கெட்ட வார்த்தைகளை பயன்படுத்த பழகியிருக்கலாம்.

சிலர் வாதத்தில் ஆதிக்கம் செலுத்த விரும்புவதால் கோபத்தின்போது கெட்ட வார்த்தைகளால் கத்தலாம்.

அவர்கள் அப்படி கெட்ட வார்த்தைகளால் கத்தும்போது சக்திவாய்ந்தவர்களாக இருப்பதாக உணர்கிறார்கள் மற்றும் மற்றவர்கள் சொல்வதை எந்த வகையிலும் கேட்க விரும்பமாட்டார்கள்.

இப்படி, மக்கள் கோபமாக இருக்கும்போது கத்துவதற்கு வெவ்வேறு காரணங்கள் உள்ளன.

கோபமாக இருக்கும்போது கூச்சலிடும் போக்கு அல்லது கத்தும் போக்குடையவர்கள் ஒரு "உணர்ச்சி பேச்சாளராக" இருக்கலாம். விடயங்களை நியாயப்படுத்துவதை விட, உணர்வுகள் மற்றும் உள்ளுணர்வின் அடிப்படையில் இவர்கள் பேசலாம் அல்லது செயல்படலாம்.

கெட்ட வார்த்தைகள் சக்திவாய்ந்தவை- உணர்ச்சி ரீதியாக, உடலியல் ரீதியாக, உளவியல் ரீதியாக மற்றும் சமூக ரீதியாக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியவை.

அசுத்தமான மற்றும் கெட்ட வார்த்தைகள் சக்தி வாய்ந்ததாக இருப்பதால், அது மற்ற வகை மொழிகளிலிருந்து வேறுபட்டதாக இருக்கும்.

கோபத்தில் கத்துவது உணர்ச்சி ரீதியான உறுதியற்ற தன்மையின் பிரதிபலிப்பாகும்.

கோபத்தின் போது கத்திக் கதறி அசிங் கமான, அவலட்ச ணமான வார்த்தை களை தொடர்ந்து வெளிப் படுத்தப் பழகினால் அது ஒரு பழக்கமாக ஆகிவிடும். காலப் போக்கில் அப்படிச் செய்வது தன்னால் அதை மாற்ற முடியாமற் போவதுடன், தன்னிடம் ஒரு பிழையான அல்லது மோசமான நடத்தை வெளிப்படுகிறது என்பதை புரிந்து கொள்ள முடியாமல் போய்விடும்.

கோபம் என்பது எதிர்மறையான உணர்வு நிலை, இது பொதுவாக விரோத எண்ணங்கள், உடலியல் தூண்டுதல் மற்றும் தவறான நடத்தைகளுடன் தொடர்புடையது.

கோபத்தில் கெட்ட வார்த்தைகளை பயன்படுத்துவது ஏற்புடையதல்ல.

கோபம் இயல்பான ஒரு வெளிப்பாடாக இருந்தாலும் நாம் பண்பாடு மிக்க சமூக உறுப்பினர்கள் என்பதால் எமது கோபத்தை எமக்குப் போன்று மற்றவர்களுக்கும் எந்த பாதிப்புகளும் ஏற்படாதபடி வெளிப்படுத்துவதே முறையானதும் ஏற்புடையதுமாகும்.

---

# அபாயா அடிப்படை வாதத்தின் அடையாளமா?

## ஒரு பல் சமய பார்வை

**இஸ்மாயில் சலபி**

முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயா, பர்தா போன்ற ஆடை அமைப்பு அடிப்படைவாதத்தின் அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது.

முப்பது வருடங்களுக்கு முன்பு இந்த ஆடை முஸ்லிம்களிடம் இருக்கவில்லை. இப்போது ஏன் இப்படி அணிகின்றனர் என்று கேட்கின்றனர்.

ஒருவர் அணியும் ஆடையை வைத்து அடிப்படை வாதத்தைத் தீர்மானிக்க முடியுமா? முப்பது வருடங்களுக்கு முன் நாம் இப்படி ஆடை அணியாவிட்டால் இப்போது அணியக் கூடாதா? இந்த நாட்டில் உள்ள சிங்கள, தமிழ் பெண்கள் இப்போது அணியும் ஆடையைத்தான் முப்பது வருடங்களுக்கு முன்னரும் அணிந்தார்களா?

குறிப்பிட்ட சில காலங்களுக்கு முன்னர் தாழ்த்தப்பட்ட பெண்கள் மேலாடை அணியக் கூடாது என்ற நிலை இந்த சமுதாயத்தில் இருந்துள்ளது. அவர்கள் மேலாடை போடும் போது நீங்கள் இதற்கு முன் போடவில்லை, இப்போது ஏன் போடுகின்றீர்கள்? எனக் கேட்டால் அது நியாயமாகுமா?

அபாயா அந்நிய நாட்டு ஆடை என்கின்றனர். அரபுக் கலாசாரம் என்றும் விமர்சிக்கின்றனர். அபாயா அந்நிய கலாசாரம் என்றால் இன்றைய எமது இலங்கை மக்கள் அணியும் ஆடையமைப்பு இலங்கைக் கலாசாரமா?

ஐரோப்பிய கலாசார ஆடையை அணிந்து கொண்டு முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடையை அந்நிய அரபு கலாசார ஆடை என்று கூறுவது அறியாமை அல்லவா?

இந்த ஆடையமைப்பு அரேபிய கலாசாரம் என்பதையும் தாண்டி உலகளாவிய அமைப்பில் முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடையாக மாறிவிட்ட பின்னரும் இப்படிப்பேசுவது அறியாமையையும், காழ்ப்புணர்வையும்தான் வெளிப்படுத்துகின்றது.

### வரலாற்று ஓட்டத்தில் ஹிஜாப்:


ஹிஜாப் என்றால் மறைப்பு என்பது அர்த்தமாகும். ஒரு பெண் தனது உடலை முழுமையாக மறைத்து ஆடை அணியும் முறைக்கே இப்படிக் கூறப்படும். நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதற்கு முன்னரே, மோஸஸ் காலத்துக்கு முதல் கொண்டே முகம் மூடி, முக்காடிட்டு ஆடை அணியும் வழமை இருந்துள்ளது. முக்காட்டை நீக்குவது பெண்ணை இழிவுபடுத்துவதின் அடையாளமாக உள்ளது.

### பழைய ஏற்பாட்டில் ஹிஜாப்:

இதே வேளை, முக்காடிட்டு மறைத்துக் கொள்வது நல்ல பெண்களின் அடையாளமாக பைபிள் பேசுகின்றது.

'ஊழியக்காரனை நோக்கி: அங்கே வெளியிலே நமக்கு எதிராக நடந்து வருகிற அந்த மனிதன் யார் என்று கேட்டாள். அவர்தான் என் எஜமான் என்று ஊழியக்காரன் சொன்னான். அப்பொழுது அவள் ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காடிட்டுக் கொண்டாள்.' (ஆதியாகாமம்: 24:65)

இந்த வசனம் அரபு பைபிளில்: 'பஅகததில் புர்கா வத கத்தத்' - புர்காவை எடுத்து தன்னை மறைத்துக் கொண்டாள் என்று எழுதப்பட்டுள்ளது. (The Universal Jewish Encyclopaedia)



இந்த வார்த்தை முகத்தை மூடும் துணியைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் என்ற விளக்கத்தைத் தருகின்றது. The International Standard BIBLE Encyclopaedia - 1915/5/3047.

அந்தக் காலத்தில் உயர்ந்த நிலையில் உள்ள பெண்கள் முகத்தை மூடப் பயன்படுத்தும் துணியை இது குறிக்கும் என்று குறிப்பிடுகின்றது. இதிலிருந்து சுதந்திரமான நல்ல பெண்கள் முகத்தை மூடுவதை வழமையாகக் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

### முக்காட்டை நீக்குவது அவமானத்தின் சின்னமாகப் பார்க்கப்பட்டுள்ளது

'ஸ்திரீயைக் கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி, அவள் முக்காட்டை நீக்கி, எரிச்சலின் காணிக்கையாகிய நினைப்பூட்டுதலின் காணிக்கையை அவள் உள்ளங்கையிலே வைப்பானாக சாபகாரணமான கசப்பான ஜலம் ஆசாரியன் கையிலிருக்கவேண்டும்,' (எண்ணாகமம்: 5:18)

விபச்சாரம் செய்த பெண்களின் முக்காட்டை நீக்குவது அவளைக் கேவலப்படுத்துவதாக அமைகின்றது.

பழைய ஏற்பாட்டின் மற்றும் பல வசனங்கள் ஆடைக் குறைப்பு என்பது இழிவின் அடையாளமாகப் பேசப்பட்டுள்ளது.

### புதிய ஏற்பாட்டில் ஹிஜாப்:

புதிய ஏற்பாடு ஹிஜாபை இஸ்லாத்தை விட வலியுறுத்தி ஒரு பெண் தனது தலையை மறைக்க வேண்டும் என்று கூறுகின்றது.

'ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளா விட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள் தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக் கடவள்.' (1 கொரிந்தியர்: 11:6)

முக்காடு போடாவிட்டால் மொட்டை அடிக்கச் சொல்கின்றது. பைபிளின் படி மொட்டை அடிப்பது கேவலமானதாகும். அதே போல் ஒரு பெண் தலையைத் திறந்திருப்பதும் கேவலமானதாகும்.

### இந்து, பௌத்த மதங்களில் ஹிஜாப்:

இந்து மதமும் பெண் தன் உடல் அழகைக் காட்டக் கூடாது. குனிந்த பார்வையுடன் இருக்க வேண்டும் என்று போதிக்கின்றது. உனக்ககாகப் படைத்த உன் சீமாட்டிக்குக் கூறு. உன்னுடைய கண்களைத் தாழ்வாக்கிக் கொள். பார்வையை மேல் நோக்காதே! அது உன் பாதத்தை நோக்கியதாக இருக்கட்டும். பிறர் எவரும் உன் வெளித் தோற்றத்தைப் பார்க்கா வண்ணம் திரையிட்டுக் கொள்! (ரிக் வேதம், நூல் 08, வேத வரி 33, மந்திரம் 19, - நன்றி சமூக வலைத்தள கட்டுரை)

பௌத்தத்தின் அடிப்படையில் ஒரு பெண் தனது கரண்டைக் காலுக்கு மேல் உயரும் விதத்தில் ஆடை அணியக் கூடாது. அதே வேளை, முகத்துக்குக் கீழே கழுத்துப் பகுதிகள் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். பெண் தன்னை மறைத்துக் கொள்வதைத்தான் ஹிஜாப் என இஸ்லாம் கூறுகின்றது.

### முஸ்லிம் பெண்களின் ஆடை:

ஒரு முஸ்லிம் பெண் இன்று அவள் அணியும் அபாயா என்கின்ற இந்த ஆடையைத்தான் அணிய வேண்டும் என்பது கட்டாயமன்று. ஒரு பெண் அணியும் ஆடை, மெல்லியதாகவோ, இறுக்கமானதாகவோ, ஆணின் ஆடை போன்றோ, அதிக வாசனை பூசியதாகவோ, அரை குறையானதாகவோ இருக்கக் கூடாது.

இந்த ஒழுங்கு முறைக்கு அபாயா என்ற இந்த வடிவமைப்புதான் வசதியானதாக உள்ளது. அதை அணிய வேண்டாம் என்று கூறுவதற்கு யாருக்கும் அதிகாரமில்லை.

அத்துடன் இந்த ஆடை அமைப்பு ஒன்றும் புதியதும் கிடையாது. முஸ்லிம் நாடுகளில் காலாகாலமாக அணியப்பட்டு வருவதுதான். இலங்கைக்கு சற்று தாமதித்து அறிமுகமாகியுள்ளது. இலங்கையிலும் கன்னியாஸ்திரிகள் இதற்கு ஒப்பான ஆடையைத்தான் அணிகின்றனர். எனவே, இந்த ஆடை முறையை எதிர்ப்பது இஸ்லாத்தின் மீது கொண்ட காழ்ப்புணர்வும், போதிய புரிதல் இல்லாத செயலுமாகும்.

### பொதுவான பார்வை:

இலங்கை முஸ்லிம்கள் தமது தனித்துவத்தைப் பேணும் அடிப்படையில்தான் ஆடை அணிந்து வந்துள்ளனர். ஒரு சமூகம் தனது தனித்துவத்தை வெளிப்படுத்தினால் அடுத்த சமூகம் அதற்காக வெறுப்படைய வேண்டியதில்லை. தமது தனித்துவத்தைப் பேணத் தெரியாதவர்கள் அடுத்தவர்களின் தனித்துவ அடையாளங்களை அழிக்க முயலக் கூடாது.

ஒரு பௌத்த மதகுரு அணியும் ஆடை அமைப்பும் அதன் நிறமும் ஒருவருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். எனவே, அவர் அதை அணியாமல் இருக்கலாம். ஆனால், அதை அவர் எதிர்க்க முடியாது.

அந்த ஆடை பிடிக்காவிட்டாலும் அந்த ஆடையை அணிந்தவரை அவசியம் மதித்து கண்ணியப் படுத்தத்தான் வேண்டும்.

ஒரு பூசாரி மேல் சட்டை போடாமல் இருப்பது பார்ப்பதற்கு நாகரிகமற்ற போக்காக ஒருவருக்குப் படலாம்.

ஆனால், அந்த அடையாளத் துடன் ஒருவரைக் கண்டால் அவர் ஒரு கொள்கை அடிப்படையில் அப்படி ஆடை அணிவதால் அவரை மதிப்பது மற்றவர்கள் மீது கடமையாகின்றது.

இவ்வாறே கிறிஸ்தவ மத போதகர்கள், கன்னியாஸ்திரிகள் அணியும் ஆடை ஒருவருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அதற்காக அவர்களை அகௌரவப்படுத்த முடியாது. அவர்கள் தமது மதத்தின் மீது கொண்ட பற்றுதலை மதித்து அவர்களை கண்ணியப்படுத்துவது அனைவரின் மீதும் கடமையாகின்றது.

இவ்வாறே இலங்கையில் உள்ள 'வெத்தா' எனப்படும் வேடுவ இன மக்கள் கச்சை மட்டும் அணிந்து கையில் கோடரி வைத்திருப்பர்.

நாம் யாரும் இப்படி இருக்க விரும்ப மாட்டோம். என்றாலும் இவ்வாறு ஒரு வேடுவ இன மக்களைக் கண்டால் அவர்களுக்குரிய கண்ணியத்தை வழங்குவது நமது கடமையல்லவா?

இவ்வாறே ஒரு முஸ்லிம் பெண் அணியும் அபாயாவோ அதன் நிறமோ உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஒருவர் தான் அணியும் ஆடை அனைவருக்கும் பிடித்த முறையில் அணிய முடியாது. இருந்தாலும் ஒழுக்கத்தையும் தனது மார்க்கத்தின் மீது கொண்ட பற்றுதலின் அடிப்படையிலும் இவ்வாறு ஆடை அணிபவர்களை மதித்து நடக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. இதை அனைவரும் உணர்ந்து நடந்து கொண்டால் நல்லதொரு நல்லிணக்க நிலை உருவாகும்.

எல்லா மதங்களும் பெண்களுக்கான ஒழுக்கமான ஆடையமைப்பை வலியுறுத்தியுள்ளன. ஏனைய சமயத் தலைவர்கள் தமது மத போதனைகளுக்கு ஏற்ப தமது மதப் பெண்களை ஆடையணிவிப்பதில் தோற்றுப் போயுள்ளனர்.

தமது மதப் பெண்களை மாற்ற முடியாது என்ற நிலையில் முஸ்லிம் பெண்கள் இஸ்லாமிய அடிப்படையில் ஆடை அணிவதை எதிர்த்து தமது தோல்வி மனப்பான்மையை வெளிப்படுத்தி வருவது வேதனைக்குரியதாகும்.

எனவே, அபாயாவை எதிர்ப்பதை விட்டு விட்டு தத்தமது சமூகப் பெண்களின் ஆடையமைப்பை ஒழுக்கமானதாக அவரவர் மதக் கலாசாரத்திற்கு ஏற்றதாக மாற்ற முயல்வதே ஆரோக்கியமானதாகும்.

# கடலிலும் கரையிலும் தத்தளிக்கும் இலங்கை மீனவர்கள்!



நூருள் ஹுதா உமர்

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட அழகிய இலங்கை தீவில் விவசாயம், சுற்றுலாத்துறை, ஏற்றுமதி, போன்று மீன்பிடியும் பிரதான தொழில்களில் ஒன்றாக காணப்படுகின்றது. இதில் மீன்பிடி தொழில் என்பது, மீன் பிடித்தல், மீன் வளர்த்தல், மீன் அல்லது மீன் பொருட்கள் விற்பது, பதப்படுத்துவது, பாதுகாப்பது, சேமித்து வைப்பது, ஒரு இடத்தில் இருந்து மற்ற ஒரு இடத்திற்கு கொண்டு செல்லுவது, அல்லது இவை சம்பந்தபட்ட எந்த தொழிலையும் அடக்கியது ஆகும். இத்துறையின் வணிக செயல்பாடானது, மீன் மற்றும் இதர கடல் உணவு பொருட்களை, மனித நுகர்வு அல்லது பிற தொழில் செயல்முறைகளுக்கு உள்ளீடாக விநியோகம் செய்வது ஆகியவற்றை இலக்காக கொண்டுள்ளது. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ,

மூலம் பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புனரமைப்பு பணிகள் தொடர்பான தன்னுடைய எதிர்பார்ப்புக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்து புனரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றமையும் தனியார் முதலீட்டாளர்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்கா உட்பட்ட அதிகாரிகளையும் கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளமையும் சற்று ஆறுதலளிப்பதுடன் கிழக்கு மீனவர்களின் மீன்பிடித்தொழிலின் எதிர்காலம் மீதான நம்பிக்கையையும் அதிகரிக்கின்றது.

### கடற்றொழிலாளர்களை பாதித்துள்ள எரிபொருள் தட்டுப்பாடு

எரிபொருள் நிலைய ஊழியர் கேனில் எரிபொருள் தர முடியாது. வாகனத்தை கொண்டு வா எனக்கூறியதால், எரிபொருள் வாங்க வந்த மனிதர் இரு தம்பி .. இதோ எடுத்து வர்றேன்... எனகூறிச்சென்று எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பெரிய படகையே கொண்டு வந்த சம்பவம் அம்பலாங்கொட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்றது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

கடற்றொழிலை தங்குதடையின்றி, கிரமமாக முன்னெடுப்பதற்கு போதியளவு எரிபொருளை பெற்றுத்தருமாறு கோரி ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாளர்கள் பல்வேறு பிரதேசங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன் ஒரு அங்கமாக கல்முனை ஆழ்கடல் மீனவர்

வந்தது. இருந்து வருகின்றது.

தடையின்றி மண்ணெண்ணை வழங்க வேண்டும்,மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும், இந்திய இழுவைப் படகுகளின் வருகையினை தடை செய்ய வேண்டும், சட்டவிரோத மீன்பிடி தொழில்கள் அனைத்தும் தடைசெய்யப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து முல்லைத்தீவு மீனவ சம்மேளனத்தினால் முல்லைத்தீவு நகரில் மீனவர்களால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது .

ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகிய மூவரும் கலந்துரையாடி, குறித்த பிரச்சினைக்கு தீர்க்கமான முடிவொன்றினை எட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஆனால் நடந்தது எதுவுமில்லை என மீனவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர். அம்பாறை மாவட்ட மீனவர்களின் எரிபொருள் பிரச்சினை தொடர்பில் கல்முனை பிரதேச செயலகத்தில் வைத்து மீனவ சங்க தலைவருக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீஸ் கல்முனை, சாய்ந்தமருது ஆகிய பிரதேசத்தில் உள்ள குறிப்பிட்ட 05 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விசேடமாக வாரத்தில் 07 நாட்களும் டீசலினை வரவழைத்து அதனை மீனவர்களுக்கு மாத்திரம் முன்னுரிமைப்படுத்தி வழங்குவற்கு ஆலோசித்து இது சம்மந்தமாக பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர்



நஸ்ட ஈடு போன்ற கோரிக்கைகளை முன்வைத்த கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலின் போது, கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் பிரச்சினையை தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிகளை தெளிவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உடனடியாக குறிப்பிடத்தக்களவு மண்ணெண்ணையை முதற் கட்டமாக ஏற்பாடு செய்து வழங்கியதுடன், ஏனைய விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு முடிந்தளவு முயற்சிகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார். டிக்கொவிற்ற, உஸ்வெட்டி கெய்யாவ பிரதேசத்தினை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் அமைச்சரை சந்தித்து, எரிபொருள் தட்டுப்பாடு, கடலரிப்பு, மணல் தூர்வாருதல் போன்ற விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தி, தாங்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் அசௌகரியங்களுக்கு முடிவு கட்டுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை கொடுக்க வேண்டிய தேவையில்லை என்றும் அவ்வாறான அரசியலை செய்ய வேண்டியதில்லை எனவும் தெரிவித்துள்ள அமைச்சர்

துறைமுகமானது, துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் அமைச்சராக இருந்த அஷ்ரபின் எதிர்பார்ப்பு மற்றும் ஆரம்ப முயற்சிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டது.

இத்துறைமுகத்தின் ஒரு பக்கம் வர்த்தக துறைமுகமாகவும் மறுபக்கம் மீன்பிடித் துறைமுகமாகவும் இரு பயன்பாடுகளைக் கொண்டதாக அமைக்கப்பட்ட இந்த துறைமுகமானது, காலத்திற்கு காலம் கடலரிப்பு மற்றும் மணல் நிறைதல் போன்ற காலநிலை சவால்களை எதிர்கொண்ட போதும் அதை முறையாக பராமரிப்பதில் இருந்த குறைபாடுகள் காரணமாக, துறைமுகப்பகுதியில் மணல் நிறைந்து துறைமுக வாயில் மூடப்பட்டதால் பல வருடங்களாக



வெளிப்படையாக தெரிகின்றது.

அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது இறங்கு துறையை சரிசெய்து கொடுப்பதன் மூலம் அப்பிரதேச மீனவர்களையும் தாண்டி மீன் சார் உற்பத்திகளில் பெரிய பொருளாதாரத்தை ஈட்டும் வாய்ப்பு இருக்கிறது. மீன்பிடி வள்ளங்களை பாதுகாப்பாக நிறுத்த முடியாமல் பல்வேறு அச்சத்திற்கு மத்தியிலும் அம்பாறை மாவட்ட மீனவர்கள் மட்டக்களப்பு உட்பட பல்வேறு மாவட்டங்களுக்கு கடந்த காலங்களிலிருந்து செல்ல வேண்டியுள்ளது. இதற்கிடையில் சாய்ந்தமருதில் படகுகளில் தரித்து நிற்கக்கூடிய இறங்கு துறை இயற்கையாகவே உள்ளது. மாறி மழை காலங்களில் தமது மீன்பிடி வள்ளங்களை தரித்து நிறுத்தக்கூடிய இடவசதி அங்கு இருக்கிறது.

ஒலுவில் துறைமுகத்தை மாத்திரமல்லாது சாய்ந்தமருது இறங்கு துறையையும் சரிசெய்து கொடுப்பதன் மூலம் அப்பிரதேச மீனவர்களையும் தாண்டி மீன் சார் உற்பத்திகளில் பெரிய பொருளாதாரத்தை ஈட்டும் வாய்ப்பு இருக்கிறது. காணி, கடல், பெருந்தோட்டம் இவைகள் நாட்டுக்கு பெரும் வருமானத்தை ஈட்டித்தருவது. மீன்பிடி என்பது எமது நாட்டு மக்களின் பிரதான தொழில்களிலும் உணவுகளிலும் ஒன்று. வளைத்து கடல்கள் இருக்கும் தீவில் வாழும் நாங்கள் இந்த வளத்தை வைத்து மீன்கள் ஏற்றுமதி செய்வதில் இன்னும் பெரியளவில் வளர்ச்சியடைய வில்லை. இதற்கு காரணமாக நாம் பல்வேறு சவால்களை நாம் சந்தித்து வருகின்றோம்.

ஒலுவில் துறைமுகத்தின் புனரமைப்பு பணிகளை சிறப்பாக செய்ய எண்ணி காணொளி

பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் மீனவர்கள் வாழ்வாதாரம் இழந்து, நிர்க்கதியடைந்திருப்பதாகவும் கல்முனை மாநகர எல்லையினுள் 10 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருந்தும் கூட கடற்றொழிலுக்காக தங்களால் டீசலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் மீனவர்கள் கவலை தெரிவித்தனர். கல்முனைப் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு தற்போது போதியளவு டீசல் வருகின்ற நிலையில், மீன்பிடிப் படகுகளுக்கென தங்களால் டீசலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் டீசல் விநியோகத்தின்போது தங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அதனை வழங்குமாறு கடற்றொழில் திணைக்களத்தின் உறுதிப்படுத்தலுடன் பிரதேச செயலாளரினால் சிபார்சுக் கடிதங்கள் வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும் எரிபொருள் நிலையங்களில் அதற்கு மதிப்பளிக்கப்படாமல், ஓரங்கட்டப்படுகின்றோம் எனவும் இதன்போது அவர்கள் கடும் விசனமும் கண்டனமும் வெளியிட்டனர்.

இப்பிரச்சினைக்கு உடனடியாக தீவினைப் பெற்றுத்தருவதற்கு கடற்றொழில் அமைச்சரும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர என மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதனால் மீனவர்களின் ஆர்ப்பாட்டத்தையடுத்து, இப்பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கான முக்கிய கூட்டம் ஒன்று, கல்முனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளரினால் ஒழுங்கு செய்யப்பட்டு பேச்சுவார்த்தையும் இடம்பெற்றது. இந்நிலைதான் இலங்கை முழுவதும் இருந்து

மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உடன் தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்திருந்தார். இது தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் மக்கள் காங்கிரஸ்/ம், முஸ்லிம் காங்கிரஸ்/ம் ஜனாதிபதிக்கு வலியுறுத்தியிருந்தது. இவைகளுக்கு மத்தியில் ஓரிரு வாரங்களுக்குள் கடற்றொழிலாளர்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொடுக்க முடியாமல் போகுமானால், கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவது தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களிடம் தெரிவித்துள்ளார். அவை பொருளாதார நெருக்கடி நிறைந்த இந்த காலத்தில் எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பது இங்கு சிந்திக்கவேண்டியதாக உள்ளது.

### அமைச்சரை சந்தித்த மீனவர்கள்

இவைகளுக்கு மத்தியில் கிழக்குக்கு வெளியேயும் இந்த பிரச்சினை விஸ்பரூபம் எடுத்துள்ளது. அதன் தொடராக கொழும்பு தெற்கு, வெள்ளவத்தை - தெஹிவளை - கல்கிசை பிரதேசங்களை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் அருட் தந்தை சக்திவேல் அவர்களின் ஏற்பாட்டில் அமைச்சர் டக்ளஸை தமது எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகவும் எரிபொருள் தட்டுப்பாடு, பேர்ள் எக்ஸ்பிரஸ் விபத்தினால் ஏற்பட்ட நஸ்டஈடு, மற்றும் எரிபொருள் இன்மையினால் தொழிலில் ஈடுபட முடியாமைக்கான

டக்ளஸ், முடியுமானளவு குறைந்த விலையில் கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணையைப் பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக பல சந்தர்ப்பங்களில் தெரிவித்துள்ளதுடன் மக்களின் எதிர்பார்ப்புக்களையும், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முடிந்தளவு தீர்த்துக்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டே கடற்றொழில் அமைச்சின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என்று எண்ணம் கொண்டுள்ளதுடன் முறைகேடுகள், துஸ்பிரயோகங்கள் அற்ற வகையில், கடற்றொழில் அமைச்சின் செயற்பாடுகள் மக்களை சென்றடைவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று முடிவெடுத்துள்ளார். ஆனாலும் அவை சரியாக நடைபெற்றுகின்றதா என்பதையும் அமைச்சர் இதயசுத்தியுடன் இப்போது கண்காணிக்க வேண்டியுள்ளது.

### பெருமூச்சு விட்ட கிழக்கு மீனவம்

ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் பல வருடங்களுக்கு பின்னர் கடற்றொழிலாளர் பயன்பாடிற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மறைந்த மர்/ஹும் எம் எச் எம் அஷ்ரப் அவர்களின் பெயரை கொண்டு மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது இலங்கை மீனவர்களுக்கு கிடைத்த மகிழ்ச்சியான செய்தியாக நோக்கலாம். இருந்தாலும் இந்த துறைமுகத்தை அண்டிய பிரதேசங்கள் கடலுக்கு இரையாவதும் கண்முன்னே தெரிகிறது. இந்த ஒலுவில் மீன்பிடித்

கைவிடப்பட்ட நிலையில் இத்துறைமுகத்தை நம்பியிருந்த பலநாள் படகுத் தொழிலை செய்துவந்த கடற்றொழிலாளர்கள் காலநிலைக்கு ஏற்ப தமது படகுகளை வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் தரித்து பாதுகாக்கும் நிலையே இருந்து வந்தது.

### பிரச்சினையால் உயர்ந்த மீன்விலை

மீன் வியாபாரத்தில் நிச்சயமாக மனிதாபிமானம் இருக்க வேண்டும். செல்வமீன்-1000 ரூபாவுக்கு மேல், வெட்டு மீன்-2400 ரூபாவுக்கு மேல், ஒரு வேக் 100 ரூபாக்கு வாங்கிய சாலை மீன் 1000 ரூபா, கீரி 1400 ரூபா, இறால் 2400 ரூபா தவிர கடல் மீனுக்குதான் எரிபொருள் தட்டுப்பாடு என்றால் கரைவலை மீனுக்கும் ஆற்று மீனுக்கும் இந்த நிலைதான் என்கின்றனர் நுகர்வோர்.

பாராளுமன்றத்தில் பேசப்படவேண்டிய மற்றும் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள், பிரச்சினைகள், தேவைகள் எவ்வளவோ இருக்கத்தக்கதாக தேவையில்லாத விடயங்களுக்கு பல கோடி ரூபாய்களை செலவழித்து நேரத்தையும் வீணடித்து எம்.பிக்கள் பொழுது போக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையை பொருளாதார ரீதியாக மீட்க என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய வேண்டிய நேரத்தில் தேவையற்ற விடயங்களுக்காக அரசியல் சண்டை பிடிக்கும் நிலை எமது நாட்டில் இப்போது உருவாகியுள்ளது. மீன்களின் விலை இப்போது தங்கத்தின் விலைக்கு ஒப்பாக கடற்கரையிலையே விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த நிலை மாற மீனவர்களின் பிரச்சினைகள் பத்திரிகை அறிக்கைகளில் மட்டும் தீர்க்கப்படாமல் உண்மையிலயே தீர்க்கப்பட வேண்டும்.



